
பாரதிதாசன் குயில்



SMILE OF BEAUTY « அழகின் சிரிப்பு

PURATCHI KAVIGNAR
BHARATHIDASAN'S
SMILE OF BEAUTY

Translation by:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரின்
அழகின் சிரிப்பு

ஆங்கில ஆக்கம்:

டாக்டர் P. பரமேஸ்வரன்
கோவை பூ.சா.கோ கலை மற்றும்
அறிவியல் கல்லூரியின்
ஆங்கிலப் பேராசிரியர்

பாவேந்தர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு விழாவை நோக்கி!

1891 1984 1991

விலை ரூபாய் **7-00**

அச்சிட்டோர் :

திரு இராமன் அச்சகம்,
புதுச்சேரி-605001.
தொலைபேசி: 4489

முகப்பு: *All India Press*
புதுச்சேரி-1.

ஏப்ரல் 1984

Smile of Beauty

---

a note on the work and its translation

'A thing of beauty is a joy for ever,' says John Keats. And almost all forms and aspects of Nature, which are without doubt beautiful, are recast and portrayed in Barathidasan's (1891—1964) SMILE OF BEAUTY in brilliant poetry.

SMILE OF BEAUTY consists of 153 stanzas. First three stanzas speak of beauty in general. Then follows brilliant description, in ten stanzas each, of sea, breeze, forest, hillock, river, red lotus, sun, sky, banyan, doves, parrot, gloom, town, city and Tamil.

I consider SMILE OF BEAUTY of Barathidasan his masterpiece. This Revolutionary poet and premier disciple of Bharathi shines more gloriously as a pure poet here than in any other of his works. Theme and style have their own sublimity in this sweet work.

SMILE OF BEAUTY proves beyond a shadow of doubt the poet's powers of shrewd observation, the rapturous merger of his soul with the beauty of Nature and the happy heights that he reaches in poetic expression.

I completed the translation of SMILE OF BEAUTY in 1976 when my father died. I went on revising my translation a number of times till I was convinced I had done my best. Though I have spared no pains to bring out the excellence of the work and though a quarter century of teaching experience and reading habit has come to my aid in my translation, I cannot but be aware of the superiority of the original.

The following reference books have helped me in finding apt words in English for the botanical and zoological terms used in this translation.

1. Tamil Lexicon in six volumes published by the University of Madras.

2. Vernacular List of Trees, Shrubs & Woody Climbers in the Madras Presidency by A. W. Lushington, conservator of Forests, Northern circle, Madras. Volumes I, II A & II B, published by Government of Madras, 1915.

At last, I sent a typed copy of my translation to Thiru. Mannar Mannan, the illustrious son of the Revolutionary poet in 1980 and asked him to publish it himself or permit me to bring it out on my own.

I sent a typed and bound copy of my translation in Sep. 1983 to the world University in the Arizona state of the U.S.A. It has honoured me by awarding the Cultural Doctorate in Literature in April 1984.

Now the "Bharathidasan Kuyil" has honoured me by publishing all the 153 stanzas both in original and in translation in its special issue to mark the 94th birthday of Bharathidasan (29-4-1984)

Now, the SMILE OF BEAUTY is published as an elegant book, thanks to the efforts of Thiru. Mannar Mannan.

Writers like me need encouragements; when our efforts are rewarded with recognition we wil be inspired to achieve more and something higher.

5-5-84
Coimbatore-14 *P. Parameswaran*

—

"His love for nature with rare sensibility is expressed in a fresh and unconventional way in Alagin Sirippu............ His constant themes are love, Place of women, Tamil, Tamilians, Children and democracy which gives man his rightful place".

- T. P. Meenakshisundaranar
in "Indian Literature since independance" - 1973

BARATHIDASAN

– A brief life sketch

BARATHIDASAN (Kanaga. Subburathinam) (1891-1964), a great Tamil poet was born in Pondicherry when Pondicherry was under French rule.

As a young boy he learnt Tamil under the great scholar Thiru. Pu. A. Periasamy. He had a fine keenness of perception and could compose poems at the age of 11. His early poem, 'Mother's Majesty' was greatly appreciated by poet Barathi. The poem appeared in original and in English translation in periodicals of that time.

At the age of 17½, Subburathinam completed his teacher's training with distinction in Tamil and become a Tamil teacher. He evinced genuine interest in teaching and though later he become famous as a poet, remained a teacher till his retirement.

Having come in close contact with poet Barathi who was then in voluntary exile in Pondicherry, Subburathinam admired his poetry and developed a personal love for him. Soon he assumed the pen-name Barathidasan.

Contact with Barathi and other freedom fighters of the day threw Barathidasan into the Indian Nationalist Movement. For a time he was actively connected with the nationalist journals such as 'Thai Nadu', 'Desopakari' and 'Desasevagan'.

Soon Barathidasan was drawn into the Self-Respect Movement of Periyar E. V. Ramasamy. It was a rationalistic movement that stood for socio-religious reforma-

tion. Barathidasan's poems gave wings to rationalistic ideas. With Periyar, he also told the down-trodden people to shake off the yoke of inferiority placed on them by the so-called highest caste and hold their heads high. His tirades against the evils of religion, particularly Hinduism, earned him many enemies who vented their anger against him by grossly misrepresenting him and under-rating his powers.

Barathidasan was an effective platform speaker. He wrote dialogues for films. He was for a period elected member of the Pondicherry Legislative Assembly. He edited and published a number of journals. 'Karpagam' 'Puduvai Murasu' and 'Kuyil', his favourite poetic mouthpiece are some such. He has published more than 40 works, most of them poetry.

Barathidasan enjoyed fame in his own lifetime. He was decorated with Brocaded Shawls thrice in his lifetime. The Tamil Writers' Conference presented him with a shield in 1963. His statue was unveiled in Madras during the 2nd World Tamil Conference in 1966. The Women's College at Pondicherry is named after him. The house in which he lived was taken over by the Pondicherry Govt. and declared property of national importance. The govt. runs in it a Library cum Museum on the life and work of the poet.

Barathidasan leaves behind his wife Palaniammal, his son Mannarmannan and two daughters. Mannarmannan is on the staff of All India Radio.

In Pondicherry Bharathi Park, near Rajnivas, is Poet, Barathidasan's Statue. The Pondicherry Engineering College is to be named after him.

○

1. அழகு - Beauty

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
    கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
    தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
    மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
    தனில் அந்த அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்

I espy her in the young
    rising sun of the dawn,
in the expanse of the sea,
    in the band of light!
She is seen in the grove,
    the flowers, the tender sprigs
and in all the places that
    receive my touch.
I find her in the ruby-red
    rays of the setting sun
She offers poetry
    in the horde of parrots
perching on all the
    branches of the banyan tree.   (1)

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
    திருவிளக்கிற் சிரிக்கின்றாள், நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில்
    நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே செந்தோட்

புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
    புது நடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
    நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

She lingers as the light
    in the lashes of a babe;
laughs in the holy lamp,
    plays in the bend of
the lady's fingers making
    garlands of flowers
Her sides burst with pride
    in the majestic stride
of the farmer carrying the
    plough on his red shouldess;
She transfixes my eyes
    in the field rich with crops;
Her entry into my heart
    makes me ebullient with joy. (2)

திசைகண்டேன், வான்கண்டேன் உட்புறத்துச்
    செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன்யாண்டும்
அசைவனவும் நின்றனவும் கண்டேன் மற்றும்
    அழகுதனைக் கண்டேன் நல்லின்பங் கண்டேன்
பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்!
    பழமையினால் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
    நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

I see all the directions,
    the sky, the many many things

that are packed on our earth,
    the moving and the still things;
I see beauty everywhere
    and am filled with joy
It is she that gives
    interest to all the things
Age cannot wither nor custom
    stale her eternal youth!
Look with desire and you will
    find her everywhere!
There is no misery when
    absorbed in beauty. (3)

2. கடல் - Sea

மணல் அலைகள்

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்,
கீரியின் உடல் வண்ணம்போல்
மணல்மெத்தை; அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்;
புரண்டிடும்; பாரய்தம்பி. (1)

Sand waves

All along the ocean
    to the east of the town
is the bed of sand
    like the body of mongoose

the waves on the sand
    rise and roll and fall
like the proud learned youth,
    O look brother all. (1)

மணற்கரையில் நண்டுகள்

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும். (2)

Crabs on the sandy shore

Like the gamboling of
    the white swans' horde
the waves spring, swirl and
    fall in the shore!
As the frothy white waves
    recede from the shore
the tiny-legged crabs
    surprise us by their dance. (2)

புரட்சிக்கப்பால் அமைதி

புரட்சிக்கப் பால் அமைதி
பொலியுமாம், அதுபோல், ஓரக்
கரையினில் அலைகள் மோதிக்
கலகங்கள் விளைக்கும்; ஆனால்

அருகுள்ள அலைகட் கப்பால்
கடலிடை அமைதி அன்றோ!
பெருநீரை வான்மு கக்கும்;
வான்நிறம் பெருநீர் வாங்கும்!

Calm after storm

Calm blooms after storm;
    even so waves dashing
against the shore
    cause commotion;
but isn't there peace in
    the sea beyond the beach?
the ocean waters
    the sky absorbs
they take on the
    colour of the sky (3)

*கடலின் கண்கொள்ளாக் காட்சி

பெருபுனல் நிலையும், வானிற்
பிணைந்தஅக் கரையும், இப்பால்
ஒருங்காக வடக்கும் தெற்கும்
ஓடு நீர்ப் பரப்பும் காண
இருவிழிச் சிறகால் நெஞ்சம்
எழுந்திடும்; முழுதும்காண
ஒருகோடிச் சிறகு வேண்டும்
ஓகோகோ எனப்பின் வாங்கும்!

The Enchanting sight of the sea

Vast expanse of the sea,
    sky joining shore beyond,

river running north-south
on this side - to espy
these tha heart takes
on the wings of eyes;
but dazzles as it
needs myriad wings
to enj y the beauty
of all these things! (4)

கடலும் இளங்கதிரும்,

எழுந்தது செங்க திர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்!
வெளியெலாம் ஒளியின் வீச்சு!
முழங்கிய நீர்ப்ப ரப்பின்
முழுதும்பொன் னொளிப றக்கும்
பழங்கால இயற்கை செய்யும்
புதுக்காட்சி பருகு தம்பி!

The Sea and the young rays of the Morn

Oh! the red rays rise
from the sea! gold is
sprinkled everywhere!
the space is splashed
with light! All the
noisy sea gets
a golden tinge
Drink, brother, the new
magic the age-old
Nature is casting! (5)

கடலும் வானும்

அக்கரை, சோலை போலத்
தோன்றிடும்! அந்தச் சோலை,
திக்கெலாம் தெரியக் காட்டும்
இளங்கதிர் செம்ப ழத்தைக்
கைக்கொள்ள அம்மு கில்கள்
போராடும் கருவா னத்தை
மொய்த்துமே செவ்வா னாக்கி
முடித்திடும்! பாராய் தம்பி!

Sea and Sky

The other bank looks
    like a grove lit by
young rays; crimson fruit
    clouds struggle to grab!
the rays turn the
    black sky into red. (6)

எழுந்த கதிர்

இளங்கதிர் எழுந்தான்; ஆங்கே
இருளின் மேல் சினத்தை வைத்தான்;
களித்தன கடலின் புட்கள்;
எழுந்தன கைகள் கொட்டி!
ஒளிந்தது காரி ருள்போய்!
உள்ளத்தில் உவகை பூக்க
இளங்கதிர், பொன்னி றத்தை
எங்கணும் இறைக்க லானான்.

The Rising rays

The youthful rays rise
    and cost their fury
on the gloom; sea-birds
    rise up in glee and
clap their hands; the gloom
    flee; rejoicing,
the young rays glitte
    the gold everywhere. (7)

கடல் முழக்கம்

கடல்நீரும், நீல வானும்
கைகோக்கும்! அதற்கி தற்கும்
இடையிலே கிடைக்கும் வெள்ளம்
எழில்வீணை, அவ்வீ ணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின் பத்தை
வடிக்கின்ற புலவன்! தம்பி
வண்கடல் பண்பாடல் கேள்!

The Roaring sea

Entwine the sea waters
    and the blue sky
An exquisite veena
    is the floods between them
The poet is the wind
    blowing over it

shaking its strings and
making divine music !
Hearken, O brother to the
song of the wealthy sea! (8)

நடுப்பகலிற் கடலின் காட்சி

செங்கதிர் உச்சி ஏறிச்
செந்தணல் வீசு தல்பார்!
புழுங்கிய மக்கள் தம்மைக்
குளிர்காற்றால் புதுமை செய்து
முழங்கிற்றுக் கடல்! இவ் வைய
முழுவதும் வாழ்விற் செம்மை
வழங்கிற்றுக் கடல்! நற்செல்வம்
வளர்கின்ற கடல் பார் தம்பி! (9)

The Look of the Sea at noon

Zenith reaches the red sun
and sweeps red hot rays!
Blows the sea breeze, relieves
people's swelter and exalts.
Enriches the sea's bounty
life all over the earth
See, O brother, how
the sea grows our wealth.

நிலவிற் கடல்

பொன்னாடை களைந்து, வேறே
புதிதான முத்துச் சேலை
தன்இடை அணிந்தாள் அந்தத்
தடங்கடற் பெண்ணாள், தம்பி

என்னென்று கேள்; அதோபார்
எழில்நிலா ஒளிகொட்டிற்று!
மன்னியே வாழி என்று
கடலினை வாழ்த்தாய் தம்பி. (10)

The Sea under the Moon

Unclads the sea-lady
    her habit of gold
and puts on a new
    saree of pearls Lo,
the flood of light the
    elegant moon pours!
May the sea live for
    ages and ages long!

3. தென்றல் - Breeze

மென் காற்றும் வன் காற்றும்

அண்டங்கள் கோடி கோடி
அனைத்தையும் தன்ன கத்தே
கொண்ட ஓர் பெரும்பு றத்தில்
கூத்திடு கின்ற காற்றே!
திண்குன்றைத் தூள் தூளாகச்
செயினும் செய்வாய்; நீஓர்
துண்துளி அனிச்சப் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்! (1)

Breeze and Gale

Dance you, O wind, madly
    in the vast space

that encloses millions
of universes!
May you pulverise
the two solid hill;
May you penetrate
the snake jasmine flower
without causing any
pain whatsoever. (1)

தென்னாடு பெற்ற செல்வம்

உன்னிடம் அமைந்தி ருக்கும்
உண்மையின் விரிவில், மக்கள்
சின்னதோர் பகுதி யேனும்
தெரிந்தார்கள் இல்லை யேனும்
தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன்இன் பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்? (2)

The Wealth of the South

Haven't people learnt a
little of the vastness
of the truth in you; yet
you, the wealth of the South,
to whom else did you
make known your joy? (2)

தென்றலின் நலம்

குளிர் நறுஞ் சந்த னஞ்சார்
பொதிகையில் குளிர்ந்தும் ஆங்கே

ஒளிர் நறு மலரின் ஊடே
மணத்தினை உண்டும் வண்டின்
கிளர்நறும் பண்ணில் நல்ல
கேள்வியை அடைந்து நாளும்
வளர்கின்றாய் தென்றலேஉன்
வரவினை வாழ்த்தா ருண்டா? (3)

The Good the Breeze Does

Cooled in the cool fragant
    sandalwood of Pothigai
scent-drunk through the bright
    fine-smelling flowers
growing daily in the
    exciting bees' songs
who's there, O, breeze,
    who doesn't praise you? (3)

அசைவின் பயன்

உன் அரும் உருவம் காணேன்
ஆயினும் உன்றன் ஒவ்வோர்
சின்னநல் அசைவும் என்னைச்
சிலிர்த்திடச்செய்யும்! பெற்ற
அன்னையைக் கண்டோர், அன்னை
அன்பினைக் கண்ணிற் காணோர்
என்னினும் உயிர்கூட் டத்தை
இணைத்திடல் அன்பே அன்றோ? (4)

The Use of the movement

Espy not I your shape,
    yet your every slight shiver

sends a shudder in me.
One can see one's mother,
yet sees not he her love.
Love makes the world go round. (4)

தென்றலின் குறும்பு

உலைத்தீயை ஊது கின்றாய்
உலைத்தீயில் உருகும் கொல்லன்
மலைத்தோளில் உனது தோளும்
மார்பினில் உன்பூ மார்பும்
சலிக்காது தழுவத் தந்து
குளிர்ச்சியைத் தருவாய்! பெண்கள்
விலக்காத உடையை நீபோய்
விலக்கினும், விலக்கார் உன்னை! (5)

The Pranks of the Breeze

Blow you the furnace; yet
embrace breast with breast and
shoulder to shoulder and
cool the smith sweating near
the furnace! Undress you
the women who themselves
wouldn't dare to unclothe;
still won't they leave you! (5)

குழந்தையும் தென்றலும்

இழந்திட்டால் உயிர்வா ழாத
என்னாசை மலர்மு கத்துக்
குழந்தையின் நெற்றி மீது
குழலினை அசைப்பாய்; அன்பின்

கொழுந்தென்று நினைத்துக், கண்ணிற்
குளிர்செய்து, மேனி யெங்கும்
வழிந்தோடிக் கிலுகி லுப்பை
தன்னையும் அசைப்பாய் வாழி (6)

The Breeze and the child

Flutter you the hair
nestling on the brow
of the babe dearest
to my heart! Cool you
the eyes, glide over
child's soft body,
love's tender leaf and
shake its rattle too. (6)

தென்றல் இன்பம்

இருந்த ஓர் மணமும் மிக்க
இனியதோர் குளிரும் கொண்டு
விருந்தாய்நீ அடையுந் தோறும்
கோடையின் வெப்பத் திற்கு
மருந்தாகி அயர்வினுக்கு
மாற்றாகிப் பின்னர் வானிற்
பருந்தாகி இளங்கி ளைமேற்
பறந்தோடிப் பாடு கின்றாய்! (7)

The Joy of the Breeze

With a pleasing wind
and a sweet coolness
come you to us a feast
and act as medicine

to the summer heat and
    relieve our tiresomeness
Become you an eagle and
    sing flying over a sprig. (7)

தென்றலின் பயன்

எழுதிக்கொண் டிருந்தேன்; அங்கே
எழுதிய தாளும் கண்டாய்;
வழியோடு வந்த நீயோ
வழக்கம்போல் இன்பம் தந்தாய்;
"எழுதிய தாளை நீ ஏன்
கிளப்பினை" என்று கேட்டேன்,
"புழுதியைத் துடைத்தேன்" என்றாய்;
மீண்டும்நீ புணர்ந்தாய் என்னை! (8)

Use of the Breeze

You saw me writing and
    the written paper too;
came you on the way and
    as usual, pleased me;
'Why did you lift the
    paper?' queried I,
Saying 'I wiped the dust,'
    you embraced me again, (8)

தென்றற்கு நன்றி

கமுகொடு, நெடிய தென்னை
கமழ்கின்ற சந்த னங்கள்,
சமைகின்ற பொதிகை அன்னை,
உனைத்தந்தாள்; தமிழைத் தந்தாள்;

தமிழ் எனக்கு அகத்தும், தக்க
தென்றல்நீ புறத்தும், இன்பம்
அமைவுறச் செய்வ தைநான்
கனவிலும் மறவேன் அன்றோ? (9)

Thanks to Breeze

Areca, coconut
 and sandalwood trees
produces the Pothigai
 mother and gives you and the
Tamil, you, externally,
 and Tamil internally
please me; can I forget
 this even in my dreams? (9)

தென்றலின் விளையாட்டு

களச்சிறு தும்பி பெற்ற
கண்ணாடிச் சிறகில் மின்னித்,
துளிச்சிறு மலர்இ தழ்மேல்
கூத்தாடித் துளிதேன் சிந்தி,
வெளிச்சிறு பிள்ளை யாடும்
பந்தோடு விளையாடிப், போய்க்,
கிளிச்சிற காடை பற்றிக்
கிழிக்கின்றாய் தென்ற லேநீ! (10)

The Play of the Breeze

Glitter you in the
 glassy butterfly's wings
in the garden, sprinkle
 you drops of honey

by dancing on the
    petals of tiny
flowers, you play ball
    with the urchin outside
and grab and tear open
    dress of parrot's wing. (10)

4. காடு - Forest

மலைப்பு வழி

நாடினேன்; நடந்தேன்; என்றன்
நகரோ வியத்தைத் தாண்டித்
தேடினேன்; சிற்றூர் தந்த
காட்சியைச் சிதைத்தேன்; சென்றேன்;
பாடினேன்; பறந்தேன், தேய்ந்த
பாதையை இழந்தேன், அங்கே
மாடிவீ டொன்று மில்லை
மரங்களோ பேச வில்லை (1)

Bewildering Way

Walked and searched I
    my destination
crossed the lovely
    city precincts and
the village fading
    into the distance.
Sang, ran and lost I
    the rutted track
No palace was seen,
    no tree its mouth oped. (1)

வழியடையாளம்

மேன் மேலும் நடந்தேன்; அங்கே
'மேற்றிசை வானம்' என்னை
"நான் தம்பி என்னை நோக்கி
நடதம்பி" எனச் சொல்லிற்று!
வான்வரை மேற்குத் திக்கை
மறைத்திட்ட புகைநீ லத்தைத்
தேன்கண்டாற் போலே, கண்டேன்
திகழ் காடு நோக்கிச் சென்றேன். (2)

Tracing the Track

As I keep on walking
'Brother, walk towards me'
bespeaks the western sky.
Screen the cumulus
blue smoke the West
to the sky; enjoying
the honeyed sight move I
towards the forest. (2)

காட்டின் அழகு

வன்மை கொள் பருக்கைக் கல்லின்
வழியெல்லாம் பள்ளம் மேடு!
முன்னாக இறங்கி ஏறி
முதலைகள் கிடப்ப தைப்போல்
சின்னதும் பெரிது மான
வெடிப்புக்கள் தாண்டிச் சென்றேன்;
"கன்மாடம்" எனும்பு ருக்கள்
கற்களைப் பொறுக்கக் கண்டேன் (3)

Forest's Beauty

Strewn with sharp shingles
the path was full of undulations;

Crossed I faults small and big
    that lay like crocodiles
and espied 'Kanmaadam' pigeons
    picking the pebbles. (3)

மயிலின் வரவேற்பு

மகிழ்ந்துநான் ஏகும் போதில்
காடுதன் மயிலை ஏவி
அகவலால் வரவேற் பொன்றை
அனுப்பிற்று கொன்றைக் காய்க்கு
நிகரான வாலை ஆட்டிக்
காரெலி நின்று நின்று
நகர்ந்தது. கூடச் சென்றேன்
நற்பாதை காட்டும் என்றே. (4)

Peacock's Welcome

Happily as I proceed
    the forest its peacock sent
to welcome me with its cry.
    Wagging its tail of the size
of laburnum's unripened fruit
    moved and paused a black rat
I joiued it believing
    it would show me a good path. (4)

தமிழா நீ வாழ்க

முகத்திலே கொடுவாள் மீசை
வேடன், என் எதிரில் வந்தான்
அகப்பட்ட பறவை காட்ட
அவற்றின்பேர் கேட்டேன்! வேடன்
வகைபட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான்;
சகோ தரத்தைச் செம்போத் தென்றான்!
தமிழா நீ வாழ்க என்றேன். (5)

Tamil, I Great you

Encountered I a
    hunter with a moustache
like a sickle, showed he me
    a bird and asked I him
its name, Parathuvaasan
    called he was Valtan
and Sagoram as Semboth.
    'Tamil, I greet you' said I. (5)

வேடன் வழி கூறினன்

''போம் அங்கே! பாரும் அந்தப்
புன எலு மிச்சை'' என்றான்.
''ஆம்'' என்றேன். ''அதைத்தான் ஐயா
குருந்தென்றும் அறைவார்'' என்றான்
''ஆம்'' என்றேன் தெரிந்தவன் போல்!
''அப்பக்கம் நோக்கிச் சென்றால்
மாமரம் இருக்கும் அந்த
வழிச்செல்வீர்'' என்றான் சென்றேன். (6)

Hunter Shows the Way

'Go there! see the
    wild lime, quoth he.
'Yes' said I like
    an all-knowing person!
'It's also called
    Atalantia, Sir' he said,
Guided he me to go by the
    mango tree and so I did. (6)

காட்டின் உச்சிக் கிளையில் குரங்கு ஊசல்

செருந்தி யாச்சா இலந்தை
தேக்கீந்து கொன்றை யெல்லாம்

பெருங்காட்டின் கூரை! அந்தப்
பெருங்கூரைமேலே நீண்ட
ஒரு மூங்கில்; இரு குரங்கு
கண்டேன் பொன் னூசல் ஆடல்!
குருந்தடை யாளம் கண்டேன்
கோணல்மா மரமும் கண்டேன்! (7)

Monkey's swing on the topmost branch of a wild tree

Fear, 'yaachaa', jujube,
    teak and laburnum are
the big forest's roof!
    Suspended on it is
a bamboo and on it
    dance two monkeys.
Spotted I the wild lime
    and the snarled mango tree too. (7)

பாம்பின் வாயில் தாயைப் பறி கொடுத்த மான்கன்றை நரியடித்தது

ஆனைஒன் றிளம ரத்தை
முறித்திடும்; ஆந்தைக் கூட்டைப்
பூனை ஒன்றணுகும்; அங்கே
புலி ஒன்று தோன்றும்; பாம்பின்
பானைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும்; கன்றோ
மானைக்காணாது நிற்கும்!
அதை ஒரு நரிபோய் மாய்க்கும். (8)

Fox kills a stag grieving over the loss of its mother in the mouth of a python

Wrenches a tender
    tree an elephant

Approaches a
    cat an owl's nest
Appears there
    a tiger; a pot-mouthed
python's sight set
    to flight all others
yearns a stranded
    stag for her mother
a fox pounces
    on it and 'murders'. (8)

மயிலுக்கு கரடி வாழ்த்து

இழந்த பெட்டையினைக் கண்டே
எழுந்தோடும் சேவல் வாலின்
கொழுந்துபட் டெழுந்த கூட்டக்
கொசுக்களை முகில்தான் என்று
தழைந்ததன் படம்வி ரிக்கும்
தனி மயிலால், அடைத் "தேன்"
வழிந்திடும்; கரடி வந்து
மயிலுக்கு வாழ்த்துக் கூறும். (9)

Bear Greets Peacock

Tail of a cock pursuing
    its long-lost hen
rouses the horde of
    mosquitos; mistakes it
the lone peacock for
    a cloud and its wings
displays; overflows the
    'honey' in the bee-hive
comes there the bear
    and greets the peacock. (9)

பயன் பல விளைக்கும் காடு

ஆடிய கிளைகள் தோறும்
கொடி தொங்கி அசையும்! புட்கள்
பாடிய படியி ருக்கும்!
படைவிலங் கொன்றை யொன்று
தேடிய படியி ருக்கும்!
காற்றோடு சருகும் சேர்ந்து
நீடிசை காட்டா நிற்கும்;
பயன் தந்து நிற்கும் காடே! (10)

The Forest that does a lot of good

On all the dancing branches
dangle the hanging creepers:
Birds keep on singing ! animal
is ever after its rival
Twigs carried by the wind
sing on eternal song;
So lives long the forest
yielding its eternal fruits ! (10)

5. குன்றம் - Hillock

மாலை வானும் குன்றமும்

தங்கத்தை உருக்கி விட்ட
வானோடை தன்னி லேஓர்
செங்கதிர் மாணிக் கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை.
செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமேனிக்கு
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையம் காண! (1)

Hill and evening sky

In the molten gold of
    the skisy stream, the eve,
the ripe fruit of the gem
    of the ruby-red rays,
submerges and clothes
    in bright red coral
the emarald countenance
    of the tall steep hill. (1)

ஒளியும் குன்றும்

அருவிகள், வயிரத் தொங்கல்!
அடர்கொடி, பச்சைப் பட்டே!
குருவிகள், தங்கக் கட்டி!
குளிர்மலர், மணியின் குப்பை!
எருதின் மேற் பாயும் வேங்கை,
நிலவுமேல் எழுந்த மின்னல்,
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ!

Hill and Light

Waterfalls are diamond
    pendants; verdurous
creepers, green velvet
    sparrows, mounds of gold;
cool flowers, a pile of
    pearls! tiger pounching
on bull. lightning over
    the moon; look O the
dried leaves are the
    glittering sheets of gold!

கிளி எறிதல்

தலைக்கொன்றாய்க் கதிரைக் கொத்தி
தழைபசுஞ் சிறக டித்து
மலைப்புன்னை மரத்தின் பக்கம்
வந்திடும் கிளிக்கூட்டத்தில்,
சிலைப்பெண்ணாள் கவண் எறிந்து,
வீழ்த்தினேன் சிறகை என்றாள்.
குலுக்கென்று சிரித்தொ ருத்தி
''கொழும்புன்னை இலைகள்'' என்றாள்! (3)

Driving the Parrots

The lovely damsel slings at
the crowds of parrots carrying
grains in their beaks, fluttering
their fertile green wings and flying
beside the mountain mastwood and
says she has floured their wings.
Another lets escape a laugh
and remarks 'fleshy mastwood leaves! (3)

குறவன் மயக்கம்

பதட்டமாய் கிளிஎன் றெண்ணி
ஆதொண்டைப் பழம்பார்த் தானை
உதட்டினைப் பிதுக்கிக் ''கோவை''
உன்குறி பிழைஎன் றோதும்
குதித்தடி மான் மான் என்று
குறுந்தடி தூக்கு வானைக்
கொதிக்காதே நான் அம்மானே
எனஓர் பெண் கூறி நிற்பாள்! (4)

The Forester Nods

Mistakes he the thorny
caper's fruit for the parrot,

pouts she her 'Kovai' fruit-like
    lips and points out his slip;
raises he a stick to hit
    'the deer', stands a belle up,
soothes him and says
    'It is none but she'! (4)

குன்றச் சாரல், பிற

குன்றத்தின் ''சாரல்'', குன்றின்
அருவிகள் குதிக்கும் ''பொய்கை''
பன்றிகள் மணற்கி ழங்கு
பறித்திடும் ''ஊக்கம்'' நல்ல
குன்றியின் மணியால், வெண்மைக்
கொம்பிஞல் அணிகள் பூண்டு
நின்றிடும் குறத்தி யர்கள்
''நிலாமுகம்'' பார டாநீ! (5)

Hill showers etc.

Hill's 'showers', her waterfalls
    diving 'pools', pig's 'drive'
in plucking the root crops
    see the "Kurathis"
moon face adorned with its
    stone and ivory. (5)

குறத்தியர்

''நிறைதிஜேக் கதிர்'' முதிர்ந்து
நெடுந்தாளும் பழுத்த கொல்லைப்
புறத்தினில் தேர்போல் நீண்ட
புதுப்பரண் அமைத்து, மேலே
குறத்தியர் கவண் எடுத்துக்
குறிபார்க்கும் விழி, நீ லப்பூ!
எறியும்கை, செங்காந் தட்பூ!
உடுக்கைதான் எழில்இ டுப்பே! (6)

Girls of the Forest

In the field rich with crops
    ready for harvest
'Kurathis' of the forest
    set up a platform
long like a festive car
    and sling aim with their eyes'
the 'Neelorpalam'
    throw with their hands, the
glory-lify, and hour-glasses
    are their bewitching hips. (6)

மங்கிய வானில் குன்றின் காட்சி!

மறைகின்றான் பரிதி ; குன்ற
மங்கையோ ஒளியி ழந்து,
நிறைமுங்கில் இளங்கை நீட்டி
வாராயோ என அழைப்பாள்
சிறுபுட்கள் அலறும்! யானை
இருப்பிடம் சேரும்! அங்கோர்
குறுநரி ஊளைச் சங்கால்
இருள் இருள் என்றுகூவும்! (7)

Hill in the dim sky

There sets the sun; the lady
    of hillock loses her glow,
extends her tender full-blown
    bamboo-like hand and accosts
the sun. Tiny birds chirp!
    Reaches elephant its home!
Jackal blares. 'darkness,
    darkness everywhere! (7)

நிலவும் குன்றும்

இருந்தஓர் கருந்தி ரைக்குள்
இட்டபொற் குவியல் போலே,
கருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
கருத்துக்கள் இருத்தல் போலே,
இருள்மூடிற் றுக்குன் றத்தை!
நாழிகை இரண்டு செல்லத்
திரும்பிற்று நிலவு; குன்றம்
திகழ்ந்தது முத்துப் போலே! (8)

Hill and Moon

Like a heap of gold
hidden behind a dark curtain
like a lot of ideas
embedded in the famed Tamil words
gloom enveloped the hillock!
After a few hours
the moon shines again
like a pearl on the hill! (8)

எழில் பெற்ற குன்றம்

நீலமுக் காட்டுக்காரி
நிலாப்பெண்ணுள், வற்றக் காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுற்ற வெண்ணெய் அள்ளிக்
குன்றின்மேல் வீசி விட்டாள்!
ஏலுமட் டுந்தோ ழாநீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம்! (9)

Elegant Hillock

The blue-veiled belle,
the moon has thrown

on the hillock
    a ball of butter
skimming on the pot,
    prepared by churning
the perfectly
    boiled milk. Drink
deep the beauty, O
    brother, to the lees. (9)

முகில் மொய்த்த குன்றம்

ஆனைகள் முதலைக் கூட்டம்,
ஆயிரம் கருங்கு ரங்கு,
வானிலே காட்டி வந்த
வண் முகில் ஒன்று கூடிப்
பானையில் ஊற்று கின்ற
பதநீர் போல் குன்றில் மொய்க்கப்
போனது. அடிமை நெஞ்சம்
புகைதல் போல் தோன்றும் குன்றம்! (10)

Cloud-crowded Hillock

Clouds draw the figures of
    elephants, crowds of
crocodiles and black monkeys
    in the sky and then,
like the lime toddy poured
    into the pot, crowded they
the hill and it looked like
    the agitated slave's heart. (10)

6. ஆறு - River

நீரற்ற ஆற்றுப்பாதை

இருபக்கம் மண்மே டிட்டும்,
இடைஆழ்ந்தும், நீள மான
ஒருபாதை கண்டேன், அந்தப்
பாதையின் உள்இடத்தில்
உரித்தநற் ருழம் பூவின்
நறும்பொடி உதிர்த்த தைப்போல்
பெருமணல், அதன்மே லெல்லாம்
கதிரொளிப் பெருக்கம், கண்டேன்! (1)

Dry River-bed

With the two banks raised by
earth and the middle
deepened, there ran a long
river-bed; insides it
espied I large particles
of sand like the sprinkling
of fine dust from the oped
screw-pine flower
the sunlight falling
and flooding over it. (1)

வழிப்போக்கு

மணல்சுடும்! வழிச்செல் வோர்கள்,
இறங்கியும் ஏறியும் போய்
அணை கரை மேட்டின் அண்டை
அடர்மர நிழலில் நின்று
தணலேறும் தம்கால் ஆற்றிச்
சாலைகண் டுரைக் காண்பார்.

அணிநிலம் நடுவில் ஆற்றுப்
பாதை ''வான் வில்'' போல் தோன்றும் (2)

Travelling

Sand burns! travellers
tread up and down
on the river-bed,
move to the trees' shad
beoynd the mound-bank,
soothe their sour feet
take to the road
and reach their towns.
River course amidst land
looks like a 'rainbow'. (2)

வெள்ளம் வரும்முன்

வெப்பத்தால் வெதும்புகின்ற
வெளியெல்லாம் குளிர் காற்றொன்று
தொப்பென்று குதிக்க, அங்கே
துளிரெல்லாம் சிலிர்க்கக் கண்டேன்
எப்பக்கம் இருந்தோ கூட்டப்
பறவைகள் இப்பக் கத்துக்
குப்பத்து மரத்தில் வந்து
குந்திய புதுமை கண்டேன் (3)

Before the Onset of the Floods

Scorched is the space in heat,
but a breeze begins to blow
there; sprout up the twigs;
birds in groups came as if
from nowhere and perch
on the trees of this village. (3)

வெள்ளத்தின் தோற்றம்

ஒலியொன்று கேட்டேன். ஓஓ
புதுப்புனல்! பெரிய வெள்ளம்,
சலசல என்று பாய்ந்து
வரக்கண்டேன் தணல் நிறத்தில்
நிலவொத்த நிறம் கலந்து
நெடுவானின் சுடரும் வாங்கிப்
பொலிந்தது! கோடை யாட்சி
மாற்றிறுப் புரட்சி வெள்ளம். (4)

The leap of the Floods

Hearken the sound
 of the fresh floods !
It leaps and glitters
 with the flame's red
and the moon's white;
 The revolutionary
floods have changed
 the reign of summer. (4)

வெள்ளப் பாய்ச்சல்

பெருஞ்சிங்கம் அறைய வீழும்
யானைபோல் பெருகிப் பாய்ந்து
வரும்வெள்ளம், மோதலாலே
மணற்கரை இடிந்து வீழும்!
மருங்கினில் இருந்த ஆலும்
மல்லரந்து வீழும் ஆற்றில்!
பருந்து, மேற் பறக்கும்! நீரில்
பட்டாவைச் சுழற்றும் வாளை! (5)

The Leap of the Floods

Floods rush like the falling of
 an elephant beaten by a lion,

dash the sand-bank to pieces
and the banyan near it
fall deep into the river!
Engle soars up! In the
water fish swirls its body
like a glossy sword. (5)

வெள்ளத்தின் வரவறிதல்

கரையோரப் புலத்தில் மேயும்
காலிகள் கடமை எண்ணும்!
தரையினிற் காதை ஊன்றிச்
சரிசரி புதுவெள்ளத்தின்
திரைமோதும் ஒலிதான் என்று
சிறுவர்கள் செங்கை காட்டிப்
பெரியோரைக் கூவுகின்றார்;
பேச்சொன்றே; ஒலியோ நீளம்! (6)

Knowing the coming of Floods

Cattle grazing on the
banks think of their duty!
place urchins their ears
on the ground and know the
sound of the fresh floods and
beckon the elders;
The speech the same is, though
the sound is long-drawn-out. (6)

வெள்ளத்தின் ஒலி! அழகு

இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! நுரையோ முத்துத்
தடுக்குகள் சுழல்மீன் கொத்தி

மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்றமரங்க ளின்மேல்
ஒருநாரை வெண்டாழம்பூ!
உவப்புக்கோ உவமை இல்லை. (7)

Sound and beauty of the Floods

The two swelling banks
wriggling with floods
are the burning slopes
of gold! From is the
barrier of pearls!
the swirling king-fisher
is a sweep of emerald!
A crane perching on
the swimming trees
is a white pandanus!
There is no simile
at all for wonder. (7)

வெள்ளம் எனும் படைக்கு மரங்களின் வாழ்த்து

ஒரேவகை ஆடை பூண்ட
பெரும்படை ஒழுங்காய் நின்று
சரேலெனப் பகைமேற் பாயும்
தன்மைபோல் ஆற்று வெள்ளம்,
இராவெல்லாம் நடத்தல் கண்ட
இருகரை மரங்கள், தோல்வி
வராவண்ணம் நெஞ்சால் வாழ்த்தி
மலர்வீசும் கிளைத்தோள் நீட்டி! (8)

Trees bless the army of floods

Like an army in
uniform march in

order and attack
    the enemy abruptly
floods flew in the river
    all through the night; trees
on both the banks, not to
    face defeat, project
their branches, sprinkle
    flowers and bless the world. (8)

உழவர் முயற்சி

ஆற்று வெள் ளத்தைக்காணச்
சிற்றூரார் அங்கு வந்தார்!
போற்றினர் புதுவெள் ளத்தைப்!
புகன்றனர் வாழ்த்து ரைகள்!
காற்ருகப் பறந்து சென்று
கழனிகள் மடைதி றந்து
மாற்றினர் வாய்க்கால்! மற்றும்
வடிகாலை மறித்தார் நன்றே! (9)

Farmers become busy

There came the townpeople
    to see the floods; praised they
the fresh floods and sang songs!
    Flying like wind oped they
the fields' sluices, changed
    the channels and blocked the seep. (9)

ஆற்று நடை

நோய்தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார்
நூற்றுக்கு நூறுபேரும்!
ஓய்வின்றிக் கலப்பை தூக்கி
உழவுப்பண் பாட லானார்!

சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய்நடக் கின்றாள் வையம்
தழைக்கவே தழைக என்றே! (10)

The Gait of the River

Gone is the poverty,
vanished is the disease
for the cent per cent of
the people! without cease
raise they their ploughs and
sing the song of farming!
Seeing her children's joy
the river-mother treads
Jingling her anklets
and blessing the world! (10)

7. செந்தாமரை-Redlotus

நீர், இலை, நீர்த்துளிகள்

கண்ணாடித்தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத்துக்கள்
இறைந்தது போல்கு ளத்துத்
தண்ணீரி லேப டர்ந்த
தாமரை இலையும், மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்
உவப்போடு வீடு சேர்ந்தேன், (1)

Water, Leaf, Drops

Like the unnumbered
    bright pearls scattered in
the glamorous green
    plate on the glass floor
see I the lotus leaf
    sprawling on the water
and the drops of water
    crystals over it;
with mind brimming with
    joy reach I my home. (1)

தாமரையின் சிற்றரும்பு

சிலநாட்கள் சென்ற பின்னர்க்
குளக்கரை சென்றேன்! பச்சை
இலைத்தட்டில் சிந்தும் பால்போல்
எழில் நீரும், கரிய பாம்பின்
தலைகள்போல் நிமிர்ந் திருந்த
தாமரைச் சிற்ற ரும்பும்
இலகுதல் காணப் பெற்றேன்;
காட்சியின் இன்பம் பெற்றேன் (2)

The Sprouting bud of the Lotus

After a few days
    went I to the pond-bank;
espied I the elegant
    water like the milk sprinkled
on the greenish leafy
    plate and the sprouting bud
of the lotus rearing
    its head high like the black
snakes' heads and drank deep
    delight in these sights. (2)

முதிர் அரும்பு

மணி இருள் அடர்ந்தவீட்டில்
மங்கைமார், செங்கை ஏந்தி,
அணிசெய்த நல்வி ளக்கின்
அழகிய பிழம்பு போலத்
தணிஇலைப் பரப்பி னிற்செந்
தாமரைச் செவ்வரும்பு
பிணிபோக்கி என்வி ழிக்குப்
படைத்தது பெருவி ருந்தே! (3)

The Mature bud

Like the lovely flame
of the beautiful lamp
held in the gracefull
hands of a maiden
in a house dense with
darkness, did my eyes
enjoy the feast
of red lotus's
red bud's sight in the
expanse of cool leaves. (3)

அவிழ் அரும்பு

விரிகின்ற பச்சைப் பட்டை
மேனிபோர்த் துக்கி டந்து
வரிக்கின்ற பெண்கள், வான
வீதியைப் பார்த்துப் பார்த்துச்
சிரிக்கின்ற இதழ்க்கூட் டத்தால்
மாணிக்கம் சிதறு தல்போல்
இருக்கும்அப் பச்சி லைமேல்
அரும்புகள் இதழ்வி ரிக்கும் (4)

The Blossoming Bud

Like the women clothe in
    and covering their
countenance with the
    green stretch-silk, looking
aloft at the skiey path,
    their crowded lips smiling
spattering their rubies, the buds
    blossom on the green leaves. (4)

மலர்களின் தோற்றம்

விண்போன்ற வெள்ளக் காடு,
மேலெல்லாம் ஒளிசெய் கின்ற
வெண்முத்தங் கள்கொ ழிக்கும்
பச்சிலைக் காடு, மேலே
மண்ணுளார் மகிழும் செந்தா
மரைமலர்க் காடு நெஞ்சைக்
கண்ணுளே வைக்கச் சொல்லிக்
கவிதையைக் காணச் சொல்லும். 5

The appearance of Flowers

The bright pearl-like buds on
    the forest of green leaves
vast as the sky bathed an
    flood-light and the forest
of red lotuses that enthuse
    the people of the earth
ask the heart to be the eyes
    and see the poetry of it all. (5)

ஒப்பு

வாய்போலச் சிலம லர்கள்!
'வா' என்றே அழைக்கும் கைபோல்

தூயவை சிலம லர்கள்!
தோய்ந்துநீ ராடி மேலே
பாயும் நன் முகம் போல் நெஞ்சை
பறிப்பன சிலம லர்கள்!
ஆயிரம் பெண் கள் நீரில்
ஆர்ப்பாட்டம் போலும் பூக்கள்! (6)

Comparison

Mouth resemble a few
flowers; pure are some like
an inviting hand: like
the lovely face emerging
from the water are captivating
some; flowers are
like the dandyism displayed
in water by thousand ladies. (6)

செவ்விதழ்

ஓரிதழ் குழந்தை கன்னம்!
ஓரிதழ் விழியை ஒக்கும்!
ஓரிதழ் தன்ம ணாளன்
உருவினைக் கண்டு கண்டு
பூரிக்கும் உதடு! மற்றும்
ஓரிதழ் பொல்லார் நெஞ்சம்!
வாரித்தரச் சிவந்த
உள்ளங் கையாம் மற்றொன்று! (7

Red Petals

Child's cheek resembles a petal;
appears another
like the eye; looks a third
like the full-down lip

of a lady drunk with joy
    looking at her dear
hubby's figures; a fourth
    reminds one a wicked heart;
yet another is red like
    the palm reddened with giving (7)

தேன்

மூடிய வாய்தி றந்து
உளமார முன்னு ளெல்லாம்
தேடிய தமிழு ணர்வைத்
தின்னவே பலர்க்கும் தந்தும்
வாடாத புலவர் போலே
அரும்பிப்பின் மலர்ந்த பூக்கள்
வாடாது தேன்கொ டுக்கும்
வண்டுகள் அதைக் குடிக்கும்! (8)

Honey

Like poets infusing in
    others feeling for tamil
by expressing all they
    have learnt of yore and yet
not withered by so doing,
    buds blooming into
blossom give honey
    for the bees to drink on. (8)

வண்டுகள்

தேனுண்ண, வண்டு பாடும்!
தேனுண்டபின், ஓர் கூட்டம்
தானோர் பால் தாவும்! வேறோர்
தனிக்கூட்டம் களியாட்டத்தை

வானிடை நடத்தும்! ஒன்று
மலர் என்னும் கட்டி லுண்டு
நானுண்டென் றுறக்கம் கொள்ளும்
நறும்பொடி இறைக்கும் ஒன்று. (9)

Bees

Drunk with honey,
buzzes here a bee;
a crowd leaps to a place;
another group in an orgy
in the sky indulges!
one dozes off in the
flower-bed while another
sprinkles the scented dust. (9)

பாட்டு மணம்

என்னை நான் இழந்தேன்; இன்ப
உலகத்தில் வாழ லுற்றேன்
பொன்துகள், தென்றற் காற்றுப்,
புதுமணம், வண்டின் பாட்டுப்
பன்னூறு செழுமா ணிக்கப்
பறவைபோல் கூட்டப் பூக்கள்
இன்றெல்லாம் பார்த்திட் டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே! (10)

Song, Scent

Lost I myself in the
world of joy; golden dust,
sweet breeze, fresh fragrance,
the bee's buzzing and
the vast hordes of flowers
like thousands of
ruby-red birds, this dance of
beauty never satiates! (10)

8. ஞாயிறு-Sun

எழுந்த ஞாயிறு!

ஒளிப்பொருள் நீ! நீ ஞாலத்
தொருபொருள், வாராய்! நெஞ்சக்
களிப்பினில் கூத்தைச் சேர்க்கும்
கனற்பொருளே, ஆழ் நீரில்
வெளிப்பட எழுந்தாய்; ஓகோ
விண்ணெலாம் பொன்னை அள்ளித்
தெளிக்கின்றாய்; கடலிற் பொங்கும்
திரையெலாம் ஒளியாய்ச் செய்தாய். (1)

The Sun has Risen

Dazzling object are you! the
matchless matter of the world,
O welcome! the orb of flame,
add you drama to gay heart,
you rise from the sea's depths;
O sprinkle you all over
the sky rich gold; you make
the surging sea-waves sound, (1)

வையத்தின் உணர்ச்சி

எழுந்தன உயிரின் கூட்டம்!
இருள் இல்லை அயர்வும் இல்லை
எழுந்தனை ஒளியே, எங்கும்!
எங்கணும் உணர்ச்சி வெள்ளம்!
பொழிந்தநின் கதிர் ஒவ் வொன்றும்
பொலிந் தேறி, மேற்றி சைமேல்
கொழுந்தோடக் கோடி வண்ணம்
கொழித்தது சுடர்க்கோ மானே! (2)

World's Inspiration

O arise there all forms
of life! vanish gloom and
langour, light fills up all
the space, inspiration
wells up everywhere.
Each ray you shower enlivens,
O the Emperor of light,
the sky with myriad colours; (2)

காட்சி ஞாயிறு

பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி
திரு திரு என எரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே!
மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத்
தகளியிற் பெருவி ளக்கே! (3)

The Sun's sight

O lion bristling the
long new nice and rich
hair! O the ever-bright
ball of fire glodwing
the skiey way! the gem-hill!
the perfectly wrought
golden plate! the gigantic
lamp of the firmament! (3)

ஒளி செய்யும் பரிதி

கடலிலே கோடி கோடிக்
கதிர்க்கைகள் ஊன்றுகின்றாய்!

நெடுவானில் கோடி கோடி
நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ
இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கலின் ஒளி அளவா
அமைந்தனை! பரிதி வாழி (4)

Light-giving Sun

Implant you in the
    sea myriad hands of rays!
You project them in the
    sky too and bathe hills forests
houses tanks and rivers
    with light enough O sun,
the embodiment of light,
    our blessings to you! ( )

கதிரும் இருளும்

என்ன காண் புதுமை! தங்க
இழையுடன் நூலை வைத்துப்
பின்னிய ஆடை, காற்றில்
பெயர்ந்தாடி அசைவ தைப்போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர் கடல் நெளிதல் கண்டேன்;
உன்கதிர் இருட்ப லாவை
உரித் தொளிச் சுளை யூட்டிற்றே (5)

Ray and Gloom

Lo, what a wonder! like
    the dress woven with the thread
and the golden filament
    fluttering in the wind,

rays mix into water
    wriggling the cool sea; your rays
peel off jack fruit's shell's gloom
    and reveal its fruit's light. (5)

கறை போக்கி எழில் செய்தாய்

இலகிய பனியின் முத்தை
இளங்கதிர் கையால் உண்டாய்!
அலை அலையாய் உமிழ்வாய்
அழகின், ஒளியை யெல்லாம்!
இலை தொறும் ஈரம் காத்த
கறைபோக்கி இயல்பு காப்பாய்!
மலையெல்லாம் சோலையெல்லாம்
நனைக்கின்றாய் சுடர்ப்பொன் நீரால்; (6)

You remove the stain and beautify

Swallow you with the young
    rays of hand the glittering
snow-pearl; shower you in
    wave after wave the brightness
of beauty all; restore
    you the pristine nature
of the leaves removing the
    stain of wetness; drench you
with the water of your golden
    rays mountains, groves and all. (6)

எங்கும் அது

தாமரை அரும்பி லெல்லாம்
சரித்தனை இதழ்கள் தம்மை!
மாமரத் தளிர் அசைவில்
மணிப்பச்சை குலுங்கச்செய்தாய்!

ஆமரமாம் சேவற் கொண்டை
அதிலும் உன் அழகே காண்பேன்!
நீமன்னன்; ஒளியின் செல்வன்
நிறை மக்கள் வாழ்த்தும் வெய்யோன். (7)

The Ubiquitous sun

Cause you the lotus buds
    to bloom into petals,
the glorious green to flourish
    in the shake to the tender
shoots of the mango tree!
    Even in the cock's crest
find I your beauty! You, a
    king, a light-dispenser.
Your light enlightens and
    enriches people's lives. (7)

பரிதியும், செயலும்

இறகினில் உயிரை வைத்தாய்
எழுந்தன புட்கள்! மாதர்
அறஞ்செய்யும் திறஞ்செய் திட்டாய்
ஆடவர் குன்றத் தோளில்
உறைகின்றாய்! கன்று காலி
உயிர் பெறச் செய்கின் றாய்நீ!
மறத் தமிழ் மக்கள் வாழ்வில
இன்பத்தை வைத்தாய்நீயே. (8)

What the sun does

Infuse you life in the wings
    and arise there the birds!
Make you women keep their
    virtue. Rest you on the

Brave's bill-shoulders, to calf
    and cow bestow you life
The lives of all the brave
    Tamils keep you in cheer. (8)

பரிதி இன்றேல் நிலாவுக்கு ஒளியில்லை

வாழும் நின் ஒளிதான் இன்றேல்
வானிலே உடுக்கள் எல்லாம்
தாழங்காய், கடுக்காய்கள் போல்
தழைவின்றி அழகி ழக்கும்!
பாழ் என்ற நிலையில் வாழ்வைப்
பயிரிட்ட உழவன் நீ; பைங்
கூழுக்கு வேரும் நீயே!
குளிருக்குப் போர்வை நீயே! (9)

Sans sun Moon has no Glow

Bereft of your living light
    their beauty all the stars will
miss like the unripend fruits
    of screw-pine and myrobalan
the farmer are you creating
    new life in the waste!
the basis for gruel; the robe
    protecting us from the cold! (9)

ஞாயிறு வாழி

விழிப்பார்வை தடுத்து வீழ
விரிகின்ற ஒளியே, சோர்வை
ஒளிக்கின்ற உணர்வே, வையத்
திருளினை ஒதுக்கித் தள்ளித்
தழற்பெரு வெள்ளந் தன்னைச்
சாய்ப்போயே, வெயிலில் ஆடித்
தழைக்கின்றோம் புதுஞா யிற்றுத்
தனிச்சொத்தே வாழி நன்றே. (10)

Blessings to the Sun

You're the dazzling light;
    the inspiration
to remove exhaustion;
    your fiery light's flood
rout the gloom; play we
    and thrive in delight;
it's your sole property,
    Long live, O Sun! (10)

9. வான் -Sky

விண்மீன் நிறைந்த வான்

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத் தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி! (1)

Star-spangled Sky

Toilers on the land are called
    the poor, crave they for their rights,
the wicked shoot arrows into
    their wounds and style themselves
the rich. Watches this the wide
    sky sadly all the day through
and after dusk bluster
    into stars, Look, O brother! (1)

நிலாச்சேவல், விண்மீன் குஞ்சுகள், இருட்டுப்பூனை

பாற்புகை முகிலைச் சீய்த்து
பளிச்சென்று ''திங்கட்சேவல்''
நாற்றிக்கும் குரல் எடுத்து
நல்லொளி பாய்ச்சிப் பெட்டை
ஏற்பாட்டுக் கடங்காப் பொட்டுப்
பொடிவிண் மீன் குஞ்சு கட்கும்
மேற்பார்வை செலுத்திப் ''பூனை
இருட்டையும்'' வெளுத்துத் தள்ளும். (2)

'Moon' Cock, 'Star' Chicks, 'Gloom' Cat

Cleaving the milk-smoke-like
    cloud emerges the moon cock
blows a bugle of light and
    splashes the glow on all sides
wipes away the cat gloom
    and surveys the star chicks. (2)

பகல் வானில் முகிலோவியங்கள்

பகல்வானிற் கதிரின் வீச்சுப்
பரந்தது! முகிலி னங்கள்
வகைவகை ஓவி யங்கள்
வழங்கின; யானைக் கூட்டம்!
தகதக எனும்மா ணிக்க
அருவிகள்! நீலச் சாரல்!
புகைக்கூட்டம்! எரிம லைகள்!
பொன் வேங்கை! மணிப்பூஞ் சோலை! (3)

Cloud's drawings on the Day-lit Sky

Spreads on the daylit sky
    the sun's rays' sweep, varied

shapes assume the clouds–hordes
of elephants, glittering
brooks, blue showers, circles
of smoke, vulcanoes,
golden kino tree
and elegant gardens. (3)

இருண்ட வானும் ஏற்றிய விளக்கும்

கிழக்குப்பெண் விட்டெறிந்த
கிளிச்சிறைப் பரிதிப் பந்து
செழித்தமேற் றிசைவா னத்தின்
செம்பருத் திப்பூங் காவில்
விழுந்தது! விரிவி ளக்கின்
கொழுந்தினால் மங்கை மார்கள்
இருள்மாற்றிக் கொடுக்கின் றார்கள்! (4)

Lamp Lighted in the Dark sky

The parrot-winged ball
of Phoebus cast by
the woman of the East
falls on the shoe-flower
garden of the West.
With the expanding
tongues of flame, maidens
the darkness exchange. (4)

காலை வானம்

கோழிகூ விற்று! வையம்,
கொண்டதோர் இருளைத் தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்

ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்! (5)

The Sky of the Dawn

Crows the cock, the expanding
    rays of the farmer Sun
ploughs the land of gloom
    with his golden plough, lo!
sprous the sight of the
    sea-surrounded land
blooms the dawn blessing
    "Long live the world." (5)

வானவில்

அதிர்ந்தது காற்று! நீளப்
பூங்கிளை அசைந்தா டிற்று!
முதிர்ந்திட்ட முகிலின் சேறு
முடிற்றுச்! சேற்றுக் குள்ளே
புதைந்திட்ட கதிரிற் பூத்த
புதுப்புது வண்ண மெல்லாம்
ததும்பிற்றே வான வில்லாய்ப்!
பாரடி அழகின் தன்மை (6)

Rainbow

Vibrates rudely the gale!
    sweys and swings the long
flowery branch! denser and
    denser grow the ripened clouds!
From out of these the novel
    hues of the VIBGYOR bloom!
Look to the exquisite
    Loveliness, this rainbow, O! (6)

மழை வான்

பகல்வான்மேல் கருமு கில்கள்
படையெடுத் தன! வில் லோடு
துகளற்ற வாளும், வேலும்
சுழன்றன மின்னி மின்னி!
நகைத்தது கலகல வென்று
நல்லகார் முகில்தான்! வெற்றி
அகத்துற்ற இயற்கைப் பெண்ணுள்
இறைத்தாள் பூ மழையை அள்ளி (7)

The Sky in the Rain

Black clonds invaded
the sun and the morn,
swirl and splash the bow
and the sword and the spear
laughs the good dark
cloud thunderously
The Nature-woman
elated with a sense
of victory sprinkles
rain-flowers profusely. (7)

எரிகின்ற வானம்

தேன்செய்யும் மலரும் தீயும்!
செந்தீயும் நீருய்ப் போகும்!
கான், செய், ஊர், மலே, கா, ஆறு
கடலெலாம் எரிவ தோடு
தான்செய்த தணலில் தானும்
எரிகின்றுன் பகலோன் அங்கு
வான்செய்த வெப்பத் தால் இவ்
வையத்தின் அடியும் வேகும்: (8)

The Burning Sky

Scorched are honey-rich
    flowers! Into ashes
turn the crimson flames! woods
    fields towns hills groves rivers
seas burn and also the
    sun which itself the heat
generates! There heat scorches
    the depths of this earth! (8)

உச்சிப்போதுக்கும் மாலைப்போதுக்கும் இடை நேரம்

உச்சியில் இருந்த வெய்யோன்,
ஓரடி மேற்கில் வைத்தான்:
நொச்சியின் நிழல்கி ழக்கில்
சாய்ந்தது! நுரையும், நீரும்,
பச்சையும், பழுப்புமான
பலவண்ண முகில்கள் கூடிப்
பொய்ச் சான்று போல யானை
புகழும்; பின் மலையைக்காட்டும் (9)

The time between the Noon and the Evening

Treads the moon-day sun
    a step towards the West
leaned the shadow of
    the Chaste tree on the East!
Clouds various-coloured
    as froth, water, green
and yellow mislead
    mountain as elephant. (9)

வான்தந்த பாடம்

எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு;
நீ அதில் சிற்றெறும்பே
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித்தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள் தாம் பேசல் என்னே! (10)

The Lesson the sky teaches

How hugh is the sky!
Think you of yourself;
the earth is a tiny
guava fruit; you, like all
others are tiny
and in it; isn't it so?
Why talk madly of
the high and the low? (10)

10. ஆல்-Banyan

அடி, கிளை, காய், இலை, நிழல்

ஆயிரம் கிளைகள் கொண்ட
அடிமரம் பெரிய யானை!
போயின மிலார்கள் வானில்
பொலிந்தன பவளக் காய்கள்!
காயினை நிழலாற் காக்கும்
இலையெலாம், உள்ளங் கைகள்!
ஆயஊர் அடங்கும் நிழல்
ஆலிடைக் காணலாகும்! (1)

Root, Branch, Fruit, Leaf and Shadow

With myriad branches
    is the root of the tree
a big elephant!
    reach switches the sky!
Sparkle there the red
    unripe fruits! the palm
of the hand are the
    leaves protecting these!
Oh, shadow a town
    can a banyan tree! (1)

விழுதும் வேரும்

தூலம் போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள்! தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர்! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம்!
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்! (2)

Roots and Aerial Roots

The prop roots to the growing
    branches are the pillars!
the pillars surrounding
    the banyan, the brave warriors!
roots, the flow-crawling tails
    of the multitudinous snakes!
blue-sky-shrouding banyan, a lengthy
    pandal with only a single prop! (2)

பச்சிலை, இளவிழுது

மேற்கிளை யின்வீழ் தெல்லாம்
மின்னிடும் பொன்னி ழைகள்!
வேற்கோல் போல் சிலவீழ் துண்டாம்!
அருவியின் வீழ்ச்சி போலத்
தோற்றஞ்செய் வனவும் உண்டு!
சுடர்வான் கீழ்ப் பச்சி லைவான்
ஏற்பட்ட தென்றல் வீழ்தோ
எழுந்தங்கக் கதிர்கள் என்பேன் (3)

Green Leaves, Tender Roots

The serial roots are
the glittering golden
filaments! the rising
golden rays! seem some like
spearheads, resemble
some others waterfalls.
A sky of leafy green
under the ruby sky. (3)

அடிமரச் சார்பு

அடிமரப்பதிவி லெல்லாம்
அடங்கிடும் காட்டுப் பூனை!
இடையிடை ஏற்பட் டுள்ள
பெருங்கிளைப் பொந்திலெல்லாம்
படைப்பாம்பின் பெருமூச்சுக்கள்!
பளிங்குக்கண் ஆந்தைச் சீறல்!
தடதடப் பறவைக் கூட்டம்!
தரையெலாம் சருகின் மெத்தை! (4)

The bottom

Lurks the wild cat at
the bottom; hiss snakes

in hollows of big
    branches; fierce screams
of glass-eyed owls! Hordes
    of fluttering birds!
the floor is the soft
    bed of the dry twigs. (4)

வௌவால், பழக்குலை, கோது, குரங்கு. பருந்து

தொலைவுள்ள கிளையில் வௌவால்
தொங்கிடும்; வாய்க்குள் கொண்டு
குலைப்பழம், கிளை கொடுக்கும்;
கோதுகள் மழையாய்ச் சிந்தும்.
தலைக்கொழுப்புக் குரங்கு
சாட்டைக்கோல் ஒடிக்கும்; பின்னால்
இலைச்சந்தில் குரங்கின் வாலை
எலியென்று பருந்தி ழுக்கும்! (5)

Bat, Bunch of fruits, Sod, Monkey, Eagle

Hangs the bat in the
    farthest branch; In its mouth
puts the branch a bunch of fruits;
    pods rain down; Breaks a stick
the head-strong monkey;
    In the interstice an
eagle the monkey's tail pulls
    mistaking it for a rat. (5)

கிளிகள்

கொத்தான பழக்கு லைக்குக்
குறுங்கிளை தனில் ஆண் கிள்ளை
தொத்துங்கால் தவறி, அங்கே
துடிக்கும்தன் பெட்டை யண்டைப்

பொத்தென்று வீழும்; அன்பிற்
பிணைந்திடும்; அருகில் உள்ள
தித்திக்கும் பழங்கள் அக்கால்
ஆணுக்குக் கசப்பைச் செய்யும் (6)

Parrots

Jumps the male parrot
at the bunch of fruits;
Watches the female
with great anxiety;
Falls the male near
and mate they with love
Sweet fruits then turn
bitter to the male. (6)

சிட்டுக்கள்

வானத்துக் குமிழ்ப றந்து
வையத்தில் வீழ்வ தைப்போல்
தானம்பா டும்சிட் டுக்கள்
தழைகிளை மீது வீழ்ந்து,
பூனைக்கண் போல்ஒ ளிக்கும்;
புழுக்களைத் தின்று தின்று
தேனிறை முல்லைக் காம்பின்
சிற்றடி தத்திப் பாடும் (7)

Sparrows

Like the skiey bubbles
flying down to the earth
sweet-singing sparrows
fall on leafy branches
Sparkle their eyes like
a cat's; eat they worms
and twit on the stem
of 'Mullai' and sing. (7)

குரங்கின் அச்சம்

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று, குரங்கு தொட்டு
''விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென குதித்த தைப்போல்''
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும் (8)

Fear of monkey

Hangs a snake on the branch,
    mistakes it the monkey
for an aerial root touches,
    jumps down abruptly like
a child taking a way his
    hand from the burning lamp jumps
from branch to brasch fearing
    every prop root a snake is.
Reaching the top sees it
    its own tail gripped in fear, (8)

பறவை யூஞ்சல்

ஆலினைக் காற்று மோதும்;
அசைவேறு எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும். (9)

Birds' Swing

Dashes the wing the banyan tree,
'Will I move?' asks it laughing,
the trunk-hill standing unmoved
with its lovely branches shaking
thank the anxious birds pershing
on the branches the wind for
swinging (9)

குயில் விருந்து

மழைமுகில் மின்னுக் கஞ்சி
மாங்குயில் பறந்து வந்து
''வழங்குக குடிசை'' என்று
வாய்விட்டு வண்ணம் பாடக்
கொழுங்கிளை தோள் உயர்த்திக்
குளிரிலைக் கைய மர்த்திப்
பழந்தந்து களிப்பாக் கும்பின்
பசுந்துளிர் வழங்கும் ஆலே (10)

Cuckoo's Feast

Afraid of the lightning
from the cumulo-nimbus
flies a lovely cuckoo
and clamours sweetly for
a hut, raises banyan
its shoulder of flushy
branch, brings down its cool leaves
offers it fruits, leaves and cheers. (10)

11. புறக்கள்-Doves

கூட்டின் திறப்பு, புறக்களின் குதிப்பு

வீட்டுக்கு வெளிப் புறத்தில
வேலன்வந் தேபுறுவின்
கூட்டினைத் திறக்கு முன்பு
''குடுகுடு'' எனக் குதித்தல்
கேட்டது காதில்! கூட்டைத்
திறந்ததும் கீழ்ச் சரிந்த
கோட்டுப்பூப் போற் புறக்கள்
குதித்தன கூட்டி னின்றே! (1)

Cage opens, Doves gambol

Heard the frish and
frolic of the doves
before Velan came
out of the house
When the cage he opened
jumped they out
like the falling of
flowers from branches. (1)

புறக்களின் பன்னிறம்

இருநிலா இணைந்து பாடி
இரையுண்ணும்! செவ்வி தழ்கள்
விரியாத தாமரை போல்
ஓர்இணை! மெல்லி யர்கள்
கருங்கொண்டை! கட்டி ஈயம்
காயாம்பூக் கொத்து! மேலும்,
ஒருபக்கம் இருவா ழைப்பு!
உயிருள்ள அழகின் மேய்ச்சல் (2)

Multi-coloured Doves

Entwine, sing and
    feed two moons! a pair
like the unfurled
    petals of red lotus!
the black bun of
    the gentle belles!
condensed leaden
    bouquet of billberry!
a lovely pair
    of plantain flowers!
a vital throb
    of beauty's graze. (2)

புருக்களிடம் ஒத்துண்ணல் உண்டு

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புருக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்துமில்லை;
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை. (3)

Doves take their food together

Like the lotus
    fanning out its petals
sit and eat the
    doves in a circle;
no cuts, no thrusts
    do we find in their lives
no compulsion
    to eat in isolation

no 'the high and the
low' superstition. (3)

நடை அழகு

அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
விளிம்பினில் அடிபொ ருந்தப்
புகும்தலை; நீர்வாய் மொண்டு
நிமிர்ந்திடும்; பொன்இ மைகள்
நகும்; மணி விழிநற் பாங்கும்
நாட்டிடும்; கீழ்இ றங்கி
மகிழ்ச்சியாய் உலவி; வைய
மன்னர்க்கு நடைகற் பிக்கும்! (4)

Their graceful tread

Into the pot's
wide-mouthed brim
perches the feet
and enters the head;
drinking a mouthful
raises its head;
smile its golden
lashes; sparkle its
gem lids goodness; glides
down, in joy treads;
teaches earthly kings
the way of walking (4)

புறுவின் ஒழுக்கம்

ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன்ப டாதாம்;
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந் திடநின் றாலும்

திரும்பியும் பார்ப்ப தில்லை
வேருெரு சேவல்! தம்மில்
ஒரு புரு இறந்திட் டால்தான்
ஒன்றுமற் ருென்றை நாடும்! (5)

Dove's Virtue

Agrees a female
    only to its male;
sparkles a female
    like the flowery sparks
never another male
    its eye on it casts
only if one's pair dies,
    seeks it onother. (5)

புருக்களுக்கு மனிதர் பாடம்

அவள் தனி, ஒப்ப வில்லை;
அவன், அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக் கின்ருன். இந்தத்
தகாச்செயல் தன்னை, அன்பு
தவழ்கின்ற புருக்கள் தம்மில்
ஒருசில தறுத லைகள்
கவலைசேர் மக்க ளின்பால்
கற்றுக்கொண் டிருத்தல் கூடும்! (6)

Man's wrong lesson to Doves

Lone she's, didn't agree
    forced he her
falls she a prey
    to his lust
some among the love-
    birds from the worst
frustrated men
    might have learnt. (6)

புறாக்கள் காதல்

தலைதாழ்த்திக் குடுகு டென்று
தனைச்சுற்றும் ஆண் புறாவைக்
கொலைபாய்ச்சும் கண்ணால், பெண்ணோ
குறுக்கில்சென் றேதி ரும்பித்
தலைநாட்டித், தரையைக் காட்டி,
''இங்குவா'' எனஅ ழைக்கும்;
மலைகாட்டி அழைத்தா லுந்தான்
மறுப்பாரோ மையல் உற்றார்? (7)

Dove's Love

Looks the female with
murderous eyes
at the bent, twitting
and encircling male,
crosses, retuns the
female, its head plants,
the floor showing
beckons the male;
will the love-smitten
refuse even if
the mountain makes
a call to him? (7)

தாயன்பு தந்தையன்பு

தாய்இரை தின்ற பின்பு
தன்கு ஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்;
தாய்அருந் தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல்நி ரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்! (8)

Parent's love

Takes the mother its
    food, sees its young
one in the cage
    and opes its mouth;
Puts the young its nose
    into mother's mouth;
Emits mother its
    food and fills the young's
stomach; takes on
    father after mother's
tired! a standing
    example to love! (8)

மயிற் புறு ஆடல்

மயிற்புறு, படம்வி ரிக்கும்;
மார்பினை முன்உ யர்த்தும்;
நயப்புறு கழுத்தை வாங்கி
நன்றாக நிமிர்ந்து, காலைப்
பயிற்றிடும் ஆடல் நூலின்
படி, தூக்கி அடைவு போடும்.
மயிற்புறு வெண்சங் கொக்கும்;
வால் தந்த விசிறி ஒக்கும். (9)

Downy Dove's Dance

Displays its wings the
    downy dove, projects
and raises its chest;
    pulls up its nice neck
standing erect, treads
    it to suit the laws
of dance; resembles
    the downy dove
the white conch and
    its tail, ivory fan. (9)

அடைபடும் புறாக்கள்

கூட்டமாய்ப் பறந்து போகும்,
சுழற்றிய கூர்வாள் போலே!
கூட்டினில் அடையும் வந்தே
கொத்தடி மைகள் போலே!
கூட்டினை வேலன் வந்து
சாத்தினான், குழைத்து வண்ணம்
தீட்டிய ஓவி யத்தைத்
திரையிட்டு மறைத்தல் போலே! (10)

Home-Coming Doves

Like a swirled sharp sword,
fly they in hordes;
Enter they the cage
like the bonded slaves!
Shut Velan the
door like screening
the painting done
in rich colours! (10)

12. கிளி - Parrot

மூக்கு, கண், வாய் பசுமை

இலவின் காய் உடலும் செக்கச்
செவேலென இருக்கும் மூக்கும்,
இலகிடு மணல்தக் காளி
எழில்ஒளிச் செங்காய்க் கண்ணும்,
நிலைஒளி தழுவும் மாவின்
நெட்டிலை வாலும், கொண்டாய்,
பலர்புகழ் கின்ற பச்சைப்
பசுங்கிளி வாராய்! வாராய்! (1)

Nose, Eye, Mouth-All Green

Your nose is the unripened
    fruit of the silk cotton trees
the glowing red unripened
    black nightshade in your eye
your tail looks like the eternal
    glow of the long mango leaf
green parrot, come to me, praise you
    many, O! parrot, come to me. (1)

கழுத்துவரி, சொக்குப் பச்சை

நீலவான் தன்னைச் சுற்றும்,
நெடிதான வான வில்லைப்
போலநின் கழுத்தில் ஓடும்
பொன்வரி மின்வி ரிக்கும்!
ஆல் அல ரிக்கொ ழுந்தில்
அல்லியின் இலையில் உன்றன்
மேலுள்ள சொக்குப் பச்சை
மேனிபோல் சிறிது மில்லை! (2)

Strips on the neck-Bewitching Green

Like the rainbow spanning
    the blue sky the stripe of
gold across your neck shines.
    The green in the tenderils
of the banyan, oleander
    or leaves of water-lily
to your bewitching body's green
    can never a match be. (2)

அழகுச் சரக்கு

கொள்ளாத பொருள்க ளோடும்,
அழகினிற் சிறிது கூட்டிக்

கொள்ளவே செயும்இ யற்கை.
தான்கொண்ட கொள்கை மீறித்
தன்னரும் கையி ருப்பாம்
அழகெனும் தலைச்ச ரக்கைக்
கிள்ளியமைத் திட்ட கிள்ளாய்
கிட்டவா சும்மா வாநீ! (3)

A thing of beauty

Lends Nature beauty
    to things undesired
and make them desirable;
    contrary to its
principle plucked it
    out of itself the
essence of beauty
    and charmed and created
you, O parrot!
    come close to me. (3)

சொன்னதைச் சொல்லும்

இளித்தவா யர்கள் மற்றும்
ஏமாற்றுக் காரர் கூடி
விளைத்திடும் தொல்லை வாழ்வில்,
மேலோடு நடக்க எண்ணி
உளப்பாங்க றிந்து மக்கள்
உரைத்ததை உரைத்த வண்ணம்
கிளத்திடும் கிளியே என்சொல்
கேட்டுப்போ பறந்து வாராய்! (4)

Repeats what others say

In the life made troublesome
    by rogues and cheats, lead you
an uncommitted life;
    repeat you what others say,

hear my words, parrot! go
you may but fly back to me. (4)

ஏற்றிய விளக்கு

கிளிச்செல்வ மேநீ அங்குக்
கிடந்திட்ட பச்சி லைமேல்
பளிச்சென எரியும் கோவைப்
பழத்தில்உன் மூக்கை ஊன்றி
விளக்கினில் விளக்கை ஏற்றிச்
செல்லல்போல் சென்றாய்! ஆலின்
கிளைக்கிடை இலையும் காயும்,
கிடத்தல்போல் அதில் கிடந்தாய்! (5)

The Lit lamp

O sweet parrot dear!
keep you your red beak
on the red 'Kovai'
fruit that lies on the
leaves green; it is like
lighting a lamp with
another; like the
leaf and the nut
lying in the banyan
tree, lie you on it. (5)

நிறைந்த ஆட்சி

தென்னைதான் ஊஞ்சல்! விண்தான்
திருவுலா வீதி! வாரித்
தின்னத்தான் பழம்கொட் டைகள்!
திருநாடு வையம் போலும்!
புன்னைக்காய்த் தலையில் செம்மைப்
புதுமுடி புனைந்தி ருப்பாய்!
உன்னைத்தான் காணு கின்றேன்
கிள்ளாய்நீ ஆட்சி உள்ளாய்! (6)

Rich Sway

Coconut tree is your swing!
    procession is in the sky!
fruits and nuts are there to eat!
    your world this land seems to be!
Wear you a novel red crown
    on your head of mastwood
O! parrot, you sway
    wherever I see! (6)

இருவகைப் பேச்சு

காட்டினில் திரியும் போது
கிரீச்சென்று கழறு கின்ருய்;
கூட்டினில் நாங்கள் பெற்ற
குழந்தைபோல் கொஞ்சு கின்ருய்;
வீட்டிலே தூத்தம் என்பார்
வெளியிலே பிழைப்புக் காக
ஏட்டிலே தண்ணீர் என்பார்
உன்போல்தான் அவரும் கிள்ளாய்! (7)

Double-tongued talk

When you roam in the forest
    cry you in a screeching tone.
In the cage of fondle you like
    our child; like you s.me people
utter 'thootham' in their houses,
    write the 'water' for their living. (7)

மக்களை மகிழ்விக்கும்

கொஞ்சுவாய் அழகு தன்னைக்
கொழிப்பாய்நீ, அரசர் வீட்டு,
வஞ்சியர் தமையும், மற்ற
வறியவர் தமையும், ஒக்க

நெஞ்சினில் மகிழ்ச்சி வெள்ளம்
நிரப்புவாய், அவர் அளிக்கும்
நைந்தநற் பழத்தை உண்பாய்
கூழேனும் நன்றே என்பாய். (8)

You please people

Fondle you, flush loveliness
Flood you hearts of princesses
of palacial mansions
and paupers alike with joy
eat you the sweet and crushed fruits
gruel too find you to your taste. (8)

கிளிக்குள்ள பெருமை

உனக்கிந்த உலகில் உள்ள
பெருமையை உணர்த்து கின்றேன்;
தினைக்கொல்லைக் குறவன் உன்னைச்
சிறைகொண்டு நாட்டில் வந்து,
மனைதொறும் சென்றே உன்றன்
அழகினை எதிரில் வைப்பான்;
தனக்கான பொருளைச் செல்வர்
தமிழ்க்கீதல் போல் ஈவார்! (9)

Parrot's glory

Convince you your glory
in the world; catches you
the 'Kuravan' of the
millet-grown sylvan tract
and parades your beauty
before the houses and, like
giving their wealth to the Tamil,
give him people money. (9)

ஓவியர்க்குதவி

பாவலர் எல்லாம் நாளும்
பணத்துக்கும், பெருமைக்கும் போய்க்
காவியம் செய்வார் நாளும்
கண் கைகள் கருத்தும் நோக!
ஓவியப் புலவ ரெல்லாம்
உனைப்போல எழுதி விட்டால்
தேவைக்குப் பணம் கிடைக்கும்
கீர்த்தியும் கிடைக்கும் நன்றே! (10)

Help to Painters

Strain the poets their
    eyes hands and brain
to earn pelf and fame
    write they their epics;
If only draw painters
    portraits like you
are they sure to get
    their wealth and name. (10)

13. இருள்-Gloom

வாடிய உயிர்களை அணைப்பாய்

ஆடி ஓடிப்போய் இட்டும்,
அருந்துதல் அருந்தியும், பின்
வாடியே இருக்கும் வைய
மக்களை, உயிர்க்கூட்டத்தை
ஓடியே அணைப்பாய்! உன்றன்
மணி நீலச் சிறக ளால
மூடுவாய் இருளே, அன்பின்
முழக்கமே உனக்கு நன்றி! (1)

Embrace you the withered souls

Embrace you readily
    the exhausted people
of the world struggling
    to earn to eat and drink;
envelope them with your
    ruby blue spread-out wings
O trumpet of love, our
    obeissance to you! (1)

இருளின் பகலாடை, இரவாடை

விண் முதல் மண் வரைக்கும்
வியக்கும் உன் மேனி தன்னைக்
கண்ணிலே காண்பேன்: நீயோ
அடிக்கடி உடையில் மாற்றம்
பண்ணுவாய் இருளே உன்றன்
பகல் உடை தங்கச்சேலை
வெண்பட்டில் இராச் சேலைமேல்
வேலைப்பா டென்ன சொல்வேன்! (2)

Darkness's day dress and night dress

Admire I your body
    spreading from earth to sky.
Alter you your apparel
    so often O darkness!
Gold saree your diurnal
    dress is; O what filigree
work on the white silk on
    your nocturnal saree! (2)

இருள் நீர்நிலை கதிர், சுழல்வண்டு

'எங்குசெல் கின்றாய்' என்று
பரிதியை ஒருநாள் கேட்டேன்;
'கங்குலை ஒழிக்க' என்றான்
கடிதுசெல் தம்பி என்றேன்;
அங்குன்னைத் தொடர்ந்தான்; நீயோ
அகல்வதாய் நினைத்தான்; என்னே!
எங்கணும் நிறைந்த நீர் நீ,
அதில் 'கதிர்', சுழல் வண்டேன்றே! நீ (3)

Darkness, a tank; sun, a beetle

"Whither are you bound?"
queried I the sun
"To destroy darkness"
replied he. "Hasten,
brother" advised I.
there he pursued you.
"Vanished you," thought he.
Oh! ubiquitous water
are you; in it the sun
but a small whirling beetle. (3)

நீ முத்துடை போர்த்து நின்றாய்

கள்ளரை வெளிப் படுத்தும்
இருட் பெண்ணே, கதை ஒன்றைக் கேள்
பிள்ளைகள் தூங்கி னார்கள்;
பெண்டாட்டி அருகில் நின்றாள்;
உள்ளமோ எதிலும் ஒட்டா
திருக்கையில், நிமிர்ந்தேன், நீயோ
வெள்ளை முத்துக்கள் தைத்த
போர்வையை மேனி போர்த்தே (4)

Clothed in the apparel of Pearl

O! gloom girl, expose
 you thieves! Listen to
my story; children slept,
 wife stood near, sat I
in a vacant mood
 raised my eyes to the sky;
shrouded you your face
 in a shawl of pearls. (4)

கொண்டையில் நிலாக் கொண்டைப்பூ

மண்முதல் விண் வரைக்கும்
வளர்ந்த உன் உடல் திருப்பிக்
கண்மலர் திருப்பி நின்றாய்!
பின்புறம் கரிய கூந்தற்
கொண்டையில் ஒளியைக் காட்டும்
குளிர் நிலா வயிர வில்லை
கண்டேன்; என் கலங்கும் நெஞ்சம்
மனைவியின் திருமுன் செல்லும்! (5)

Moon-bun flower in the Bun

Turned you your eyes and body
 spanning from earth to sky
espy I the cool
 waning diamond moon
glowing in black looks
 of hair in your bun
the perflexed mind of mine
 moved towards my wife's face (5)

பிறப்பும் இறப்பும்

வானோடு நீபிறந்தாய்!
மறுபடி, கடலில் தோன்றும்
மீன் என உயிர் உடல்கள்
விளைந்தன எவ்விடத்தும்
நீ நிறை வுற்றாய்! எங்கும்,
பொருளுண்டேல் நிழலுண்டன்றோ!
பானையில் இருப்பாய்; பாலின்
அணுத்தோறும் பரந்தி ருப்பாய்! (6)

Life and Death

With heavea are you born
then, arise like fish in
the ocean souls and bodies
fill you the space everywhere.
Goes shadow with substance
always. In the pot and
in every particle
of milk do you live. (6)

உருப்படியின் அடையாளத்தை இருள் அறிவிக்கும்

உயர்ந்துள்ள அழகு மூக்கின்
இருபுறம் உறைவாய்; மங்கை
கயல்விழிக் கடையில் உள்ளாய்;
காதினில் நடுப்பு றத்தும்,
அயலிலும் சூல்வாய் பெண்ணின்
முகத்தினில் அடையா ளத்தை
இயக்குவாய் இருளே, உன்சீர்,
ஓவியர் அறிந்திருப்பார்! (7)

Darkness shows up the things

Reside you can either
side of the high nose.
in lady's eyelids' corners,
in the heart of the ear,
and in its proximity.
Betoken you on the
woman's face; a painter
only your beauty knows. (7)

இருளே அழகின் வேர்

அடுக்கிதழ்த் தாமரைப் பூ
இதழ்தோறும் அடிப்புறத்தில்
படுத்திருப் பாய் நீ! பூவின்
பசைஇதழ் ஒவ்வொன் றுக்கும்
தடுப்புக்காட்டுகின்றாய்! இன்றேல்
தாமரை அழகு சாகும்!
அடுத்திடும் இருளே, எங்கும்.
அனைத்துள்ளும் அழகு நீயே! (8)

Darkness, the Beauty's root

Lie you underneath
multi-layered petals
of lotus and an
every fresh leaf; thus
preserve its beauty
O hovering gloom
add beanty to
all places and things (8)

அறியாமைதான் இருள்: ஆனால், அதுதான் அறிவைச்செய்யும்

அறிவென்றால் ஒளியாம், ஆம் ஆம்!
அறியாமை இருளாம். ஆம் ஆம்!
அறியாமை அறிவைச் செய்யும்;
அறியாமை அறிவால் உண்டோ?
சிறுவனைத்தீண்டிற்றுத் தேள்;
நள்ளிருள் விளக்குத்தேவை;
நிறைவேற்ற நெருப்புக் குச்சி
தேடினார்; கிடைக்கவில்லை (9)

Ignorance is Darkness but it produces wisdom

Knowledge is light;
ignorance is gloom.
Yes, yes, it is right.
Ignorance brings about
wisdom; in wisdom
is there ignoranoe?
Scorpion a boy stung.
Pitchy gloom. Needed
is lamp. Searched they for
a match stick but in vain. (9)

இருளின் பெருமை இயம்ப அரிது

பெட்டியில் இருப்பதாகப்
பேசினார்; சாவி இல்லை;
எட்டுப்பேர் இதற்குள் தேளால்
கொட்டப்பட்டுத் துடித்தார்;
''கட்டாயம் தூய்மை வேண்டும்''
என்னுமோர் அறிவு தன்னை
இட்டளித் திட்ட நல்ல
இருளே உன் பெருமை என்னே! (10)

Greatness of Darkness is beyond words

It was in the box.
    No key to open it.
In gloom by then eight
    were stung by the
scorpion and writhed in pain.
    'Cleanliness is compulsory'
is lesson you taught
    O! how to sing your praise! (10)

14. சிற்றூர் - Town

நெடுஞ் சாலை எனை அழைத்து
    நேராகச் சென்று பின்னர்,
இடையிலோர் முடக்கை காட்டி
    ஏகிற்று! நானோ ஒற்றை
அடிப்பாதை கண்டேன் அங்கோர்
    ஆலின் கீழ்க் காலி மேய்க்கும்
இடைப்பையன் இருந்தான்; என்னை
    'எந்தஊர்' என்று கேட்டான் (1)

Straight took me the trunk road
    left me at the sign-post
and it went its way.
    Followed I a foot-path.
Saw there a shepherd boy.
    Asked he my native place. (1)

புதுச்சேரி என்று சொல்லிப்
    போம் வழி கேட்டேன், பையன்
'இதைத்தாண்டி அதோ இருக்கும்
    பழஞ்சேரி இடத்தில் தள்ளி

ஒதிச் சாலையோடு சென்றே
    ஒணான் பச்சேரி வாய்க்கால்
குதிச்சேறிப் போனால் ஊர்தான்
    கூப்பிடு தொலைவே' என்றான்! (2)

Answered him 'Puthuccheri'
    asked him to show the route
"Beyond this is 'Pazhancheri.'
    Near it goes the road
bordered by 'Othi' trees.
    Cross the channel called
'Green chameleon,' near it
    is your place," said he. (2)

பனித்துளி மணிகள் காய்க்கும்
    பசும்புற்கள் அடர் புலத்தில்
தனித்தனி அகலா வண்ணம்
    சாய்ந்திட்ட பசுக்கள் எல்லாம்,
தனக்கொன்று பிறர்க்கொன் றெண்ணாத்
    தன்மையால் புல்லை மேயும்!
இனித்திடப் பாடும் பையன்
    தாளம்போல் இச் இச் சென்றான். (3)

On the dew-pearls-growing grass
    hordes of cows together
without thinking one for them
    and another for others
graze the grass! sweet-singing
    shepherd join the chorus. (3)

மந்தையின் வெளி அடுத்து
    வரிசையாய் இருபக்கத்தில்,
கொந்திடும் அணிலின் வால்போல்,
    குலைமுத்துச்சோளக் கொல்லை,

சந்திலாச் சதுரக்கள்ளி,
    வேலிக்குள் தழைந்திருக்கும்;
வெந்தயச் செடிக ளின்மேல்
    மின்னிடும் தங்கப் பூக்கள் (4)

In a line on either
    side of the meadow runs
like squirrel's tail's dense hair
    like the clustering pearls
the blooming 'cholam' field;
    close square spurge in the fence
thrive; on fenugreek plants
    sparkle flowers of gold! (4)

முற்றிய குலைப்ப ழத்தை
    முதுகினிற் சுமந்து நின்று
'வற்றிய மக்காள் வாரீர்'
    என்றது வாழைத் தோட்டம்;
சிற்றேடு கையில் ஏந்தி
    ஒருகாணிப் பருத்தி தேற்ற
ஒற்றைஆள் நீர்இ றைத்தான்.
    உழைப்பொன்றே செல்வம் என்பான் (5)

Bearing the bunch of ripe
    fruits on its shoulders, "Come,
the emaciated"
    said the plantain grove;
Believes a single man in
    'Work is wealth,' supplies he
water to cotton fields
    to get bounteous yields. (5)

குட்டையில் தவளை ஒன்று
    குதித்தது, பாம்பின் வாயிற்

பட்டதால் அது விழுங்கிக்
    கரையினிற் புரளப் பார்த்த
பெட்டைப் பருந்து தூக்கிப்
    பெருங்கிளை தன்னிற் குந்தச்
சிட்டுக்கள் ஆலி னின்று
    திடுக்கிட்டு மேற்ப றக்கும்! (6)

Jumped a frog into the pond
    and fell into the mouth of
a snake; swallowed it and on
    the bank rolled; saw this an
eagle, lifted it and
    on a big branch sat. Off
the banyan the tiny
    startled sparrows alofr flew. (6)

இளையவள் முதியவள்போல்
    இருந்தனள் ஒருத்தி; என்னை
வளைத்தனள், கோழி முட்டை
    வாங்கவா வந்தீர்? என்றாள்,
விளையாட்டாய்ச் 'சேரி முட்டை
    வேகாதே!' என்றேன். கேட்டுப்
புளித்தனள்; எனினும் என் சொல்,
    'பொய்' என்று மறுக்கவில்லை! (7)

Seemed a girl like an old
    woman, asked me winningly
'Have you come to buy eggs?'
    said I mischievously,
'the slum's eggs won't boil,'
    sour she felt; yet didn't deny. (7)

''என்றேனும் முட்டை உண்ட
    துண்டோநீ'' என்று கேட்டேன்.

‘ஒன்றேனும் உண்டதில்லை;
    ஒருநாளும் உண்டதில்லை;
தின்றேனேல் புளித்த கூழில்
    சேர்ந்திடும் உப்புக் கான
ஒன்றரைக் காசுக் கென்றன்
    உயிர் விற்றால் ஒப்பார்’’ என்றாள் (8)

‘Have you ever tasted
    the egg?’ asked I. never
Not even one. Had I
    taken it, wont they agree
to sell my soul even
    for a pittance enough
to buy the salt to add
    to the sour gruel (8)

சேரிக்குப் பெரிது சிற்றூர்
    தென்னை மா சூழ்ந்திருக்கும்;
தேர்ஒன்று, கோயில்ஒன்று
    சேர்ந்த ஓர்வீதி ஓட்டுக்
கூரைகள், கூண்டு வண்டி,
    கொட்டில்சேர்வீதி ஐந்தே
ஊர் இது; நாட்டார்க்கெல்லாம்
    உயிர் தரும் உணவின் ஊற்று (9)

Bigger than slum is town
    surrounded by mango
and coconut trees; a road
    having a ;emple and
a temple car, tiled roofs,
    a caged cart, a town of
five streets; a source of
    life-giving food to all. (9)

நன்செய்யைச் சுற்றும் வாய்க்கால்
    நல்லாற்று நீரை வாங்கிப்
பொன்செயும் உழவு செய்வோன்,
    பொழுதெல்லாம் உழவு செய்தேன்
என்செய்வாய்' என்ற பாட்டை
    எடுத்திட்டான்; எதிரில் வஞ்சி
முன்செய்த கூழுக் கத்தான்
    முடக்கத்தான் துவையல்' என்றாள் (10)

The farmer producing
    golden crops with channel
water, sings 'Daylong ploughed I
    what did you do? his love
came and replied, " 'chatni'
    is to go with the gruel."   (10)

15. பட்டணம் - City

எத்தனை வகைத் தெருக்கள்
    என்னென்ன வகை இல்லங்கள்!
ஒத்திடும் சுண்ண வேலை,
    உயர் மரவேலை செய்யும்
அத்திறம் வேறே; மற்றும்
    அவரவர்க் கமைந்த தான
கைத்திறம் வேறே என்று
    காட்டின கட்டடங்கள்   (1)

How many kinds of streets!
    how many types of houses!
matching limestone work and
    matchless skill in woodwork
also their own artistic
    skill betoken the buildings.   (1)

இயற்கையின் உயிர்கட் குள்ளே
    மனிதன் தான் எவற்றினுக்கும்
உயர்ச்சியும், தான் அறிந்த
    உண்மையை உலகுக் காக்கும்
முயற்சியும் இடைவி டாமல்
    முன்னேற்றச் செயலைச் செய்யும்
பயிற்சியும் உடையான் என்று
    பட்டணம் எடுத்துக் காட்டும் (2)

Man is the crown of all
    creations of nature;
Has he efforts to put
    his knowledge to the use
of the world, practises
    constantly progressive
actions. All these facts the
    city evidences. (2)

நடுவினிற் புகையின் வண்டி
    ஓடிடும் நடை பாதைக்குள்
இடைவிடா தோடும் 'தம்மில்
    இயங்கிடும் ஊர்தி' யெல்லாம்
கடலோரம் கப்பல் வந்து
    கணக்கற்ற பொருள் குவிக்கும்
படைமக்கள் சிட்டுப் போலப்
    பறப்பார்கள் பயனை நாடி! (3)

In the middle runs a train;
    under the ground moves the
automatic vehicles
    like a chain; brings the ship
to the shore countless things
    crowd people to enjoy these. (3)

வாணிகப் பண்டக சாலை
    வைத்துள்ள பொருள் கள் தாமும்.
காண் எனக் காட்டி விற்கும்
    அங்காடிப் பொருள் கள் தாமும்
வீணைப் பயன் படுத்தும்
    வியன் காட்சிப் பொருள் கள் தாமும்
காணுங்கால் மனிதர் பெற்ற
    கலைத்திறம் காணச் செய்யும் (4)

Things in commercial
    stores and window displays;
things of wonder making
    our wasting days useful;
All these things make us see
    the art of humanity. (4)

உள்ளத்தை ஏட்டால் தீட்டி
    உலகத்தில் புதுமை சேர்க்கும்
கொள்கைசேர் நிலைய மெல்லாம்
    அறிஞரின் கூட்டம் கண்டேன்
கொள்கைஒன் றிருக்க வேறு
    கொள் கைக்கே அடிமை யாகும்
வெள்ளுடை எழுத் தாளர்கள்
    வெறுப்புறும் செயலும் கண்டேன் (5)

See I the concourse of
    the intellectuals
refine their books the mind
    and reform the world.
See I also the white-clad
    writers giving up good
principles for the bad
    and get disgusted. (5)

உண்மைக்கும் பொய்க்கும் ஒப்பும்
    உயர்வழக் கறிஞர் தம்மை
விண்வரை வளர்ந்த நீதி
    மன்றத்தில் விளங்கக் கண்டேன்;
புண்பட்ட பெருமக் கட்குப்
    பொது நலம் தேடு கின்ற
திண் மைசேர் மன்றிற் சென்றேன்,
    அவரையே அங்கும் கண்டேன் (6)

See I learned lawyers
    in the sky-high court
buildings agreeing to
    argue for truth and falsehood;
See I the same people
    in the public welfare
organizations striving
    to uplift the oppres:ed. (6)

மாலைப்போ தென்னும் அன்னை,
    உழைப்பினால் மடிவார் தம்மைச்
சாலிலே சாரா யத்தால்
    தாலாட்டும் கடையின் உள்ளே
காலத்தை களியாற் போக்கக்
    கருதுவோர் இருக்கக் கண்டேன்,
மாலையில் கோழி முட்டை
    மரக்கறி ஆதல் கண்டேன் (7)

The evening mother cradles
    those who sweat of hard labour
in the liquor barrel;
    gambol away they their
time inside the shop.
    Become eggs to them
in the evening a
    vegetarian diet. (7)

இயற்கையின் எழிலை யெல்லாம்
    சிற்றூரில் காண ஏலும்!
செயற்கையின் அழகை யெல்லாம்
    பட்டணம் தெரியக் காட்டும்!
முயற்சியும் முழுது ழைப்பும்
    சிற்றூரில் காணுகின்றேன்;
பயிற்சியும் கலையுணர்வும்
    பட்டணத் திற்பார்க் கின்றேன்! (8)

All the grace in nature
    can we see in towns!
Display cities all the
    artifical beauty!
Effort and whole-hearted
    labour see I in towns;
Training and an art instinct
    do I find in cities! (8)

வருநாளில் நாடு காக்க
    வாழ்ந்திடும் இளைஞர் கூட்டம்,
திருநாளின் கூட்ட மாகத்
    தெருஓரம் சுவடியோடு
பெருநாளைப் பயன் நா ளாக்கும்
    பெரும்பெருங் கழகம் நோக்கி
ஒருநாளும் தவறிடாமல்
    வரிசையாய் உவக்கச் செல்வார்! (9)

Youth in groups with books
    to save country's future
march on pavements with
    delight to 'Varsity
in a festive mood
    without fail every day. (9)

கலையினில் வளர்ந்தும், நாட்டுக்
கவிதையில்மி குந்தும்,
நிலவிடும் நிலா முகத்து
நீலப்பூ விழி மங்கைமார்
தலையாய கலைகள் ஆய்ந்து
தம்வீடு போதல் கண்டேன்
உலவிடு மடமைப் பேயின்
உடம்பின் தோல் உரிதல் கண்டேன் (10)

With growth in art and in
poetry the glowing
moon-faced belles with
Neelorpalam lids
study the lofty arts
and return to their homes.
See I the sloughing off
of the skin of superstition! (10)

16. தமிழ்-Tamil

முதலில் உண்டானது தமிழ்

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே "புதிய நாளை"
மனிதப்பைங் கூழ்முளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற்றமிழே நீ தான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின் வாழ்வாய் மலர்ந்த தன்றோ? (1)

Tamil was born first

On the land drained all the
    water; sprouted there the
lushy grass of mankind,
    generated "the new
tomorrow"; you, the honeyed
    Tamil, the human life
nourished! The Tamilian's
    dream has flowered into
the beautiful life
    on our earth this day. (1)

இசை கூத்தின் முளை

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு, வண்டு,
தழைமூங்கில் இசைத்ததைத், தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும் இசைத் தமிழே! இன்பம்
எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே! என் வியப்பின் வைப்பே! (2)

Origin of Music and Drama

Listened the ancient
    Tamils in days of yore
to music of birds, beasts,
    and bamboos and produced
they their musical Tamil!
    Eyes drink delight jumping
and originating
    the dramatic Tamil!
Tamil the treasure of
    my unbounded wonder! (2)

இயற்றமிழ் எழல்

அம்மா என்றழைத்தால் காகா
எனச்சொல்லல், அஃதென் றென்றைக்
செம்மையிற் சுட்டல் என்னும்
இயற்கையின் செறிவினாலே
இம்மா நிலத்தை ஆண்ட
இயற்றமி ழேஎன் அன்பே!
சும்மா தான் சொன்னார் உன்னை
ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே! (3)

Rise of the Literary Tamil

Calling 'ammaa' is like
exhorting 'kaa kaa';
following nature
closely uses Tamil
'Akh' to point things well
Liteary Tamil.
O my darling love,
you reigned this region!
Said people simply
sprouted you among men! (3)

தமிழர்க்கு தமிழ் உயிர்

வளர்பிறை போல் வளர்ந்த
தமிழில் அறிஞர் தங்கள்,
உள்ளத்தையும் உலகில் ஆர்ந்த
வளத்தையும் எழுத்துச் சொல்லால்,
விளக்கிடும் இயல் முதிர்ந்தும்,
வீறுகொள் இசையடைந்தும்
அளவிலா உவகை அடற்
றமிழேநீ என்றன் ஆவி! (4)

The Tamil is dearest to Tamils.

Tamils whose knowledge grows
    like the waxing moon
their mind and the world's wealth
    express through Tamil
letters and words and enrich
    their Tamil literary,
musical and dramatic;
    Tamil, thou art my spirit! (4)

சாகாத் தமிழ்

படுப்பினும் படாது, தீயர்
பன்னாளும் முன்னேற்றத்தைத்
தடுப்பினும். தமிழர் தங்கள்
தலைமுறை தலைமு றைவந்
தடுக்கின்ற தமிழே! பின்னர்
அகத்தியர் காப்பி யர்கள்
கெடுப்பினும் கெடாமல் நெஞ்சக்
கிளைதொத்தும் கிளியே வாழி! (5)

Immortal Tamil

Defies the Tamil the
    efforts of its destruction
Deter the devil-minded
    daily its development.
The Tamil, Tamilians
    enrich from generation
to generation and
    still survives the onslaughts
of the Agasthia's
    epics, blessings to you,
O parrot, who twit on
    the branches of the heart. (5)

கலைகள் தந்த தமிழ்

இசையினைக் காணு கின்றேன்;
எண் நுட்பம் காணுகின்றேன்
அசைக்கொணுக் கல்தச் சர்கள்
ஆக்கிய பொருள் காண் கின்றேன்;
பசைப்பொருட் பாடல் ஆடல்
பார்க் கின்றேன்; ஓவியங்கள்;
நசையுள்ள மருந்து வன்மை
பலபலநான் காண் கின்றேன். (6)

The Tamil that Begets the arts

Enjoy I the music,
  espy I the intricacy
of numbers; see I all
  products of the tireless
carvers on stone; drink with
  my eyes and ears songs, dances
and paintings, see I in thee
  the strength of strong medicines. (6)

முன்னூலில் அயலார் நஞ்சம்

பன்னூறு நூற்றுண் டாகப்
பழந்தமிழ் மலையின் ஊற்றாய்
மன்னரின் காப்பி னாலே
வழிவழி வழாது வந்த
அன்னவை காணுகின்றேன்
ஆயினும் அவற்றைத் தந்த
முன்னூலை, அயலான, நஞ்சால்
முறித்ததும் காணு கின்றேன்! (7)

The poison of the outsiders in the Source Book

Patronised you kings
for millions of years,
like the springs of the mount
of ancient Tamil,
flourished you under
their protection;
but the source book that gave
rise to many others
the enemies envenomed
and deadened its life. (7)

பகைக்கஞ்சாத் தமிழ்

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப், பின் தெற்கில் வந்தே
இடக்கினைச் செயநி னைத்த
எதிரியை, அந்நாள் தொட்டே
''அடக்கடா'' என்று ரைத்த
அறங்காக்கும் தமிழே! இங்குந்
தடைக்கற்கள் உண்டென் றாலும்
தடந்தோளுண் டெனச் சிரித்தாய்! (8)

The Tamil that defies its foes

The foe that crushed the Tamils
in the North and sought to do
mischeif also in the South
the virtue-guarding Tamil
protested 'crush down'
hurdles are many here,
but have I stout shoulders
to fight them all, so laughed you! (8)

வெற்றித்தமிழ்

ஆளுவோர்க் காட்பட் டேனும்,
அரசியல் தலைமை கொள்ள
நாளுமே முயன்றார் தீயோர்;
தமிழேநீ நடுங்க வில்லை
''வாளினை எடுங்கள் சாதி
மதம்இல்லை தமிழர் பெற்ற
காளை காள்'' என்றாய்; காதில்
கடல்முழக் கத்தைக் கேட்பாய்! (9)

The Victorious Tamil

Cringed the evil-minded
 the favour of their
political masters and
 aspired for leadership
and conspired daily,
 O Tamil knew you no fear
of them! ''Raise your swords
 sans caste sans religion;
you are all the children
 of the Tamil,'' proclaimed you;
We hear your voice sounding
 like the roar of the seas! (9)

படைத்தமிழ்

இருளினை வறுமை நோயை
இடறுவேன்; என்னு டல்மேல்
உருள்கின்ற பகைக்குன்றை நான்
ஒருவனே மிதிப்பேன், நீயோ
கருமான்செய் படையின் வீடு!
நான் அங்கோர் மறவன்! கன்னற்

பொருள் தரும் தமிழே நீ ஓர்
பூக்காடு; நானோ தும்பி ! (10)

The Tamil Army

Crush I'll the gloom
    and the penury; by myself
press I'll the rolling hill
    of hostility ! you're
the armaments factory,
    I'm a soldier there !
You're a veritable forest
    of flowers exuding
the sweet honey of words
    pregnant with meaning
and I'm a dragon-fly
    joyously drinking. (10)



பாரதிதாசன்
குயில்

பக்கம்	(பாட்டு) வரி	பிழை	திருத்தம்
10	(2) 10	shouldess	Shoulders
14	(4) 3	Tho	The
	(4) 7	enj y	enjoy
16	(7) 2	cost	cast
	(7) 7	glitte	glitter
	(7) 6	flee	flees
	(8) 3	கிடைக்கும்	கிடக்கும்
17	(9) 8	the sea	in the sea
19	(1) 4	two	too
20	(3) 1	fragant	fragrant
22	(7) 3	a feast	as a feast
27	(4) 7	joiued	joined
28	(5)	Great	Greet
	(5) 6	was	as
29	(7) 1	Pear	Pear
31	(10)6	on	an
32	(1) 2	sktsy	skiey
	(2) 1	nre	are
33	(3) 6	floured	floored
	8	leaves!	leaves'!
35	(6)	Girls of the Forest	Gipsies
	(6) 9	glory-lify	glory-lily
38	(1) 4	insides	inside
39	(2) 5	beoynd	beyond
40	(4) 8	மாற்றிறுப்	மாற்றிற்றுப்
	(4)	Leap	Look
41	(5) 4	Engle	Eagle
42	(7) 4	From	Foam
43	(9) 1	townpeople	townspeople
44		Rediotus	Red Lotus
	(1) 6	தாமைர	தாமரை
45	(1) 10	j y	joy
		தாமைரயின்	தாமரையின்
46	(3) 3	gracefull	graceful

பக்கம்	(பாட்டு) வரி	பிழை	திருத்தம்
47	(4) 1	clothe	clothed
	(5) 3	an	in
	(4) 3	countenance	countenances
48	(6) 3	நெஞ்சை	நெஞ்சைப்
	(7) 4	-down	-blown
49	(7) 3	figures	figure
	(8) 2	tamil	Tamil
52	(3) 4	glodwing	glowing
54	(6) 6	tha	the
55	(7) 4	to	of
56	(9) 3	unripend	unripened
	(9) 7	robe	shawl
	(10) 3	ஒளிக்கின்ற	ஒழிக்கின்ற
60	(5) 5	sprous	sprouts
61	(7) 1	clonds	clouds
	(7) 2	and	on
63	(10) 6	and	ant
	(10) 5	tiny	a tiny
64	(1) 2	tha	the
	(1) 6	palm	palms
	(2) 5	flow	floor
	(3) 1	serial	aerial
66	(6) 4	துடிக்கும்தள்	துடிக்கும்தன்
67	(6) 3	அக்கால்	அக்காலே
68	(8) 5	a way	away
69	(9) 5	pershing	perching
	(9) 1	wing	wind
70	(1) 1	frish	frisk
	7	ike	like
74	(7) 5	retuns	returns
75	(8) 12	to	of
77	(1) 2	trees	tree
	4	in	is
80	(7) 3	Delete 'of'	

பக்கம்	(பாட்டு) வரி	பிழை	திருத்தம்
80	6	the	they
84	(3) 8	Delete 'நீ'	
85	(5) 5	looks	locks
86	(6) 1	heave	heaven
	(6) 8	தோறும்	அணுத்தோறும்
	(7) 5	சூல்வாய்	சூழ்வாய்
87	(7) 1	can	on
	(8) 3	an	on
	7	beanty	beauty
88		அறியமை	அறியாமை
89	(10) 7	is	is a
90	(3) 6	join	joins
92	(6) 8	alofr	aloft
93	(8) 2	never	Never
	(9) 4	femple	temple
95	(2) 2	nature	Nature !
96	(4) 7	காணுங்கல்	காணுங்கால்
97	(6) 8	அவறையே	அவரையே
	(7) 6	become eggs	becomes egg
98	(8) 4	artifical	artificial
101	(3) 5	Akh	Abk
	(3) 6	Liteary	Literary
104	(8) 3	mischeif	mischief

பாவேந்தரின் படைப்புக்கள்

பாரதிதாசன் கவிதைகள் 4 பகுதிகள், அழகின் சிரிப்பு; பாண்டியன் பரிசு; தமிழியக்கம்; குடும்பவிளக்கு 5 பகுதிகள்; இசையமுது 2 பகுதிகள், காதல் நினைவுகள், காதலா கடமையா?, படித்த பெண்கள், இசையமுது 2 பகுதிகள்; தமிழச்சியின் கத்தி, சேரதாண்டவம், குறிஞ்சித்திட்டு, கண்ணகி புரட்சிக்காப்பியம், மணிமேகலை வெண்பா, நல்லதீர்ப்பு, அமைதி, இருண்டவீடு, இளைஞர் இலக்கியம், நாடகங்கள், எதிர் பாராத முத்தம், பிசிராந்தையார், தேனருவி, புகழ் மலர்கள், நாள் மலர்கள், வேங்கையே எழுக, தமிழுக்கு அமுதென்று பேர், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, சௌமியன், சிரிக்கும் சிந்தனைகள், காதல் பாடல்கள், குயில் பாடல்கள், இரணியன் அல்லது இணையற்ற வீரன், வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?, ஏழைகள் சிரிக்கிறார்கள்......மற்றும் பல......

73 ஆண்டு வாழ்க்கையில், 63 ஆண்டு கவிதைப் பணி புரிந்து, 38 ஆண்டுகள் தமிழாசிரியப் பணிபுரிந்து, பகுத்தறிவு இயக்கப் போர் முரசாய், கண் இமைப்பது தமிழுக்காக, மூச்சு ஒவ்வொன்றும் தமிழரின் மேன்மைக்காக-எழுத்து ஒவ்வொன்றும் தமிழர் ஏற்றத்திற்காக-பேச்சு ஒவ்வொன்றும், தூங்கியிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தை எழுப்புவதற்காக என்னும்படி, அரிமா நோக்குடன், அஞ்சா நெஞ்சுடன் வாழ்ந்த புரட்சிப்பாவலர், புதுமைக் கருத்தின் காவலர், புதுவைதந்த பாட்டுக்குயில், பாட்டுலகப் பாவேந்தர் என்ற சிறப்புக்களுடன் வாழ்ந்த கனகசுப்புரத்தினம் — பாரதிதாசன் அவர்களின் சீரிய வாழ்க்கை வரலாற்று நூல் "கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்". பாவேந்தரின் புதல்வர் மன்னர்மன்னன் எழுதும் அரிய நூல்-விரைவில் வெளிவர இருக்கிறது. மிக விரிவான-முறையான வரலாறு.



o